402

ஜகன்மோகினி

402
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943
MADRAS

JC
[handwritten library call number label]
183025

...த்ஸல்யம்
(...தொடர்ச்சி)

அ 2 ணா

ஜனவரி '43
மார்கழி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

வருட சந்தா ரூ. 1/8/0. தனிப் பிரதி அணு 2.

ஜனவரி 1943 சித்ரபானு மார்கழி

விஷய அட்டவணை

மலர் 20. இதழ் 1

"ஜகன்மோகன கோபாலன்" 8. கை கொட்டி விளையாடுதல்	பி. ஸ்ரீ. 1
மார்கழியின் மகத்வம்	"குகப்ரியை" 5
என்னே இவ்வுலகம்!	ஸ்ரீ ஜானம்மாள் 8
ஸ்திரீ எழுத்தாளர்கள்- 1. "குகப்ரியை"	எஸ். அம்புஜம்மாள் 10
க்ஷேமலாபங்கள்	வை. மு. கோ. உள் அட்டை
வாத்ஸல்யம்-59-வது நாவல்(தொடர்ச்சி)	வை. மு. கோ. 161-184

மேலட்டை படம்: ஸ்ரீமதி 'குகப்ரியை'

க்ஷேம லாபங்கள்

அன்புடையீர் !

சர்வலோக ரக்ஷகனுகிய ஸ்ரீகீதாசார்யனின் பரம கிருபையினுலும், மோகினியின்பால் அளப்பரிய அன்பும் ஆசியும் மழைபோல் பொழியும் நேயர்களின் பேருதவியாலும் மோகினிச் செல்விக்கு 20-தாவது ஆண்டு 1943-வது வருஷத்துடன் மங்களகரமாகப் பிறந்துவிட்டது. என்னப்பன், ஸ்ரீ பார்த்தஸாரதியின் திருவருள் நம்மீது பொங்கி, அந்த அருள் கடாக்ஷத்தினுல் நம்மெல்லோருடைய கிருகத்திலும் சந்தோஷமாகப் பால்பொங்கி ஆனந்தமும் ஆரோக்யமும் சர்வமங்களமும் பொங்கும்படியான தைமாதம் பிறக்கப்போகின்றது. நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை என்கிற முதுமொழிப்படிக்கு இந்த புதிய வருஷத்தில் நம்தேசத்திற்கு அபாரமான நன்மையையும் வெற்றியையுங் கொடுத்து பசி, பஞ்சம், பிணி முதலிய கொடுமைகளை நீக்கி, சாந்தி, அமைதி, சுபிக்ஷம், சந்தோஷம் முதலியவற்றைக் கொடுத்துக் காக்கவேண்டி எல்லாம்வல்ல இறைவனை மீண்டும் மீண்டும் இதய பூர்வமாக ப்ரார்த்திக்கின்றேன்.

நிற்க, நேயர்களுக்கு மிகவும் சந்தோஷமான ஒரு செய்தியைத் தாழ்மையுடனும் களிப்புடனும் தெரிவித்து அந்த ஆனந்தத்தை நானும் பங்கிட்டுக்கொண்டு இன்புறும்படியான ஒரு அரிய சந்தர்ப்பத்தை அளித்த அந்த பரம்பொருளின் திருவருளுக்கு நான் எப்படித்தான், எந்த பதத்தைத்தான் கூறி என் வந்தனத்தைச் செலுத்துவது?... அதேபோல இச் சந்தோஷத்திற்கு பகவானுல் காட்டப்பட்ட காரணபூதர்களாகிய மோகினியின் அன்பர்களும், ஏஜண்டுகளும் காட்டிய மகத்தான உதவிக்கு நான் எப்படித்தான் எனது நன்றியைத் தெரிவிக்கின்றது என்பதே அறியாது திகைக்கின்றேன். என்னிதயத்திலிருந்து பொங்கிவரும் ஆர்வத்துடன் கூடிய வந்தனத்தையும், நன்றி விசுவாசத்தையும் அர்ப்பணம் செய்வதைத் தவிரவேறு எதுதான் ஈடாகும்? பலமுறை சொல்லியுள்ள பல்லவியே இது என்று நினைக்கலாம்; ஆம்...பல முறையல்ல...சதா என்னிதயத்தில் ஒலிக்கும் இன்ப ஒலி இதுதான்...எது?...மோகினியாகிய பயிர், உங்கள் அன்பும் ஆதரவும் நிறைந்த மழையினுல் தளிர்த்துச் செழித்து வருகிறுள் என்பதைக்

ஸ்ரீராமஜயம்.

சித்ரபானு ஸ்ரீ மார்கழி மீ

ஜனவரி 1943

மலர் 20 இதழ் 1

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. -ஸ்ரீராகவ கவி

Estd. 1923. Vol. 20. No. 1

OFFICE OF THE REGISTRAR
20 FEB 1943
MADRAS
18307

பி.ரூ

ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்

8. கை கொட்டி விளையாடுதல்

கண்ணன் கைகொட்டி விளையாடுகிறான். அந்த விளையாட்டைப் பார்த்ததும், யசோதைக்கு அதையே பார்த்துக்கொண்டிருக்கலாமென்று தோன்றுகிறது. தானும் அவனைப்போல் ஒரு கையோடு மற்றொரு கையைச் சேர்த்துக் கொட்டி விளையாட்டுக் காட்டிக்கொண்டே, "அப்பா, கண்ணா! இந்த விளையாட்டை விளையாடு; இன்னும் விளையாடு; இன்னும், இன்னும் விளையாடு, விளையாடு" என்று யசோதை சொல்லிக்கொண்டேயிருக்கிறாள். கண்ணன் விளையாட்டுக்கும் முடிவேயில்லையென்று தோன்றுகிறது.

சப்பாணி கொட்டுதல்

கண்ணன் கைகொட்டி விளையாடும்போது, மாணிக்கத்தை உள்ளே இட்டுச் செய்த அரைச்சதங்கைகள் கிண்கிண் என்று ஒலி செய்கின்றன. அந்த அரையில் (மாற்றுயர்ந்த) ஆணிப் பொன்னால் செய்த கோவையும் தகதக வென்று ஒளிசெய்கிறது. அந்தப் பொன் மணிக் கோவையின் அருமையான வேலைப்பாட்டைத்தான் என்னென்பது?

ஆனல் இந்தப் பிள்ளைக்கும் இந்த ஆபரணங்கள் அவசியமா? இவன் சிரித்துக் கைகொட்டும்போதே, அந்தப் பவளம்போன்ற வாயையும் முத்துக்கள் போன்ற பற்களையும் பார்த்துக்கொண் டிருப்பதே போதாதா?

இப்படியெல்லாம் எண்ணமிடும் யசோதை,

மாணிக்கக் கிண்கிணி ஆர்ப்ப மருங்கின்மேல்
ஆணிப்பொன் னால்செய்த ஆய்பொன் னுடைமணி,
பேணிப் பவளவாய் முத்திலங்க, பண்டு
காணிகொண்ட கைகளால்சப்பாணி, கருங்குழல்-குட்டனே!
[சப்பாணி!

[ஆர்ப்ப-ஒலிசெய்ய. மருங்கு-இடுப்பு. ஆணிப்பொன்-மாற்று யர்ந்த பொன். ஆய்-ஆராய்ந்து செய்த. பேணி-விரும்பி. பண்டு-முற் காலத்திலே. காணி-நிலம், நிலவுரிமை, சப்பாணி-கைசேர்த்துக் கொட்டுதல். குழல்-(இங்கே) சுருண்ட ரோமம். குட்டன்-சிறு பிள்ளை.]

என்று கண்ணனைப் பார்த்துக் கைகொட்டி விளையாடும்படி சுகொஞ்கிறாள். இந்த விளையாட்டுக்குச் சப்பாணி கொட்டுதல் என்று பெயர்.

“பண்டு காணிகொண்ட கைகளால்” சப்பாணிகொட்ட வேணுமென்கிறாளாம். முற்காலத்திலே மகாபலிச் சக்கரவர்த்தி யிடமிருந்து இந்தக் கைகள்தான் தமக்கே உரிய நிலத்தை வாங்கிக் கொண்டனவாம். சக்கரவர்த்தி அறியாமையினாலும், இராஜகுலச் செருக்கினாலும், ஸர்வாதிகாரத் திமிரினாலும் புஜபலமும் ஆயுதபலமு முள்ள தனக்கே பூமி உரியதென்று எண்ணியிருந்தான். அந்த அர சுரிமைச் செருக்கையும், “நாம் நம்முடைய கை மேலும் பிறர் கை கீழுமாகச் செய்து தானம்கொடுத்து ரட்சிக்கிறோம்!” என்று அவன் எண்ணியிருந்த வண்மைச் செருக்கையும் போக்கி, “உலகம் ஸர்வரட்சகனான ஈச்வரனுக்கே உரியது” என்று சித்தாந்தம் செய்த கைகளல்லவா கண்ணன் கைகள்?

நந்தகோபரும் கண்ணனும்

இத்தகைய கைகளால் சப்பாணி கொட்டிக்கொண்டே கண்ணன் விளையாடிக்கொண்டிருக்கும்போது, தந்தையான நந்த கோபர் அங்கே வந்து உட்கார்ந்து அந்த விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்போது தாய் குழந்தையைப் பார்த்து, “கண்ணா! கண்மணியே! என் மடியிலிருந்து இறங்கிப்போய் அவர் மடியிலிருந்து கைகொட்டு, பார்க்கலாம்” என்று கொஞ்சுகிறாள். கண்ணனுடைய ஸர்வாங்க சௌந்தரியங்களையும் தன் கணவன் மடியிலே கண்ணாரக்கண்டு அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை இப்போது தாயாருக்கு.

தங்க அரைநாணோடு மாணிக்கக் கிண்கிணியும் அரையிலே ஆடி ஒலிக்க, நெற்றிச் சுட்டி தாழ்ந்து ஆடக் குழந்தை தன் மடியி லிருந்து இறங்கிப் போகும்போது யசோதை,

OFFICE OF THE REGISTRAR
20 FEB 1943

பொன்அரை நாணொடு மாணிக்கக் கிண்கிணி
தன்அரை ஆடத் தனிச்சுட்டி தாழ்ந்தாட,
என்அரை மேல்நின்(று) இழிந்(து)உங்கள் ஆயர்தம்
மன்அரை மேல்கொட்டாய் சப்பாணி! மாயவனே கொட்டாய்
[சப்பாணி,

[தனி-ஒப்பற்ற. இழிந்து-இறங்கி. ஆயர்தம் மன்-இடையர்களுக்கெல்லாம் தலைவரான நந்தகோபர். மாயவன்-அற்புதச்செயல்களையுடைய கண்ணன்.]

என்று பாடுகிறாள்.

நந்தகோபர் மடியிலிருந்து சப்பாணி கொட்டி விளையாடும் பிள்ளையை மறுபடியும் தன் மடியிலே வந்து சிரித்து விளையாட வேண்டுமென்று அழைக்கிறாள் தாய். "என் மணிவண்ணா! உன் மணிவாய் முத்திலங்கச் சிரித்து விளையாட வா இங்கே!" என்று அவள் அழைக்க அவனும் அப்படியே மறுபடியும் அவள் மடியிலேறிக் கைகொட்டிச் சிரிக்கிறான். அந்த இரவிலே—அந்தப் பால் நிலாவிலே—முத்துச் சுடர்போன்ற அந்தக் குழந்தைச் சிரிப்பு நிலாவின் மேல் நிலாவைப்போல் இருக்கிறது.

அப்போது தாயும் சிரித்துக்கொண்டே குழந்தையைப்பார்த்து, "நீ நிலா முற்றத்திலே போய் நின்றுகொண்டு விளையாடு" என்கிறாள்.

"தூநிலா முற்றத்தே போந்து விளையாட
வானிலா அம்புலீ! சந்திரா! வாஎன்று

[தூநிலா-வெண்மையான நிலா. போந்து-வந்து. வானிலா அம்புலீ-வானத்திலே விளங்குகிற அம்புலியே.]

அழைத்துக்கொண்டே விளையாடு" என்கிறாள்.

அப்படி 'அம்புலி மாமா'வை விளையாட அழைத்துக்கொண்டே நீ முற்றத்தில் நின்று அப்பா பூரித்துப் போகும்படி கைகொட்டி விளையாடு-என்கிறாள். அவரும் அவரைச் சேர்ந்தவர்களும்தான் உன் சேஷ்டையைக் கண்டே பூரித்துப் போகிறார்களே!—என்று அந்தச் சேஷ்டைகளைக் குற்றமாகச் சொல்வதுபோல் தானும் பூரித்துப் போகிறாள்.

ஒருசமயம் கண்ணன் புழுதியிலும் சேற்றிலும் விளையாடிவிட்டு அப்படியே வந்து அந்தச் சேற்றையும் புழுதி மண்ணையும் யசோதைமேல் பூசிவிட்டான். "என்னடா சேஷ்டை!" என்று சொல்லிக்கொண்டே அவள் தண்ணீரால் கழுவிக்கொள்ளப் போனாள். போனதும் கிருஷ்ணன் அவளுக்குத் தெரியாமல் உள்ளே போய்ச் சட்டித்தயிரையும் மிடாவில் வைத்திருந்த வெண்ணெயையும் காலி செய்துவிட்டான்! இந்தச் சேஷ்டைகளைக் கேள்விப்பட்டு நந்தகோபரும் இடையர்களும் பூரித்துப்போனார்களாம். தாயோ கோபம் வந்ததுபோல் பாசாங்கு செய்தாள்.

அந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்துக்கொண்டு, "அப்படிப் பட்ட துஷ்டப்பிள்ளையே! இப்போது ஒன்றும் தெரியாத விளையாட்டுப் பிள்ளைபோல் கைகொட்டி விளையாடுகிறாயே! நல்லது,

நல்லது; திருட்டுவெண்ணெய் ஜெரிக்கவேணுமே! விளையாடு, விளையாடு" என்கிறாள்.

நிஜ ஸ்வரூபம்

இப்படியெல்லாம் கண்ணனை விளையாட்டுக் காட்டிக்கொண்டிருக்கும் யசோதை திடீரென்று கண்ணனது எதிர்காலத்தையும் நிஜ ஸ்வரூபத்தையும் உணர்ந்துவிட்டவள்போல்,

> தாரித்து நூற்றுவர் தந்தைசொல் கொள்ளாது
> போர்உய்த்து வந்து புகுந்தவர், மண்ணாளப்
> பாரித்த மன்னர்படப் பஞ்சவர்க்(கு) அன்று
> தேர்உய்த்த கைகளால் சப்பாணி! தேவகி சிங்கமே! சப்பாணி!

[தாரித்து-பொறுத்து. உய்த்து வந்து-நடத்த வந்து. மண்-(இங்கே) இராஜ்யம். பாரித்த-ஆயத்தப்பட்ட. பட-அழிய. உய்த்த-செலுத்திய.]

என்று பாடுகிறாள்.

எல்லாருக்கும் பரம பிதாவாகிய கண்ணனே தூதுபோய், "பகைமை வேண்டாம்; சமாதனமாக வாழுங்கள்" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அதற்கு இசையாமல் துரியோதனாதியர் "வலிமையே உரிமை" என்ற கொள்கையுடன் கண்ணனை நம்பாமல் ஆயுத பலத்தை நம்பித் தங்கள் ஏகாதிபத்யத்தை நிலைநிறுத்தப் போருக்குப் புறப்பட்டார்கள். அப்போது அர்ச்சுன ஸாரதியாய்க் கண்ணன் தேர் நடத்தினான். அந்தத் தேர்ச் சக்கரமாகிய கால சக்கரத்திலே அகப்பட்டு நெரிந்து போனார்களாம் எதிரிகளெல்லாம். அப்படித் தேரை நடத்தின கைகளால் சப்பாணி கொட்டவேணும் என்று யசோதை பாடுகிறாள் குழந்தைக் கண்ணனைப் பார்த்து!

பெரியாழ்வார்—யசோதை

யசோதையின் வேஷரகசியம் வெளிப்பட்டுவிட்டது. ஆம், அது பெரியாழ்வாரின் தாயுள்ளம் தரித்துக்கொண்ட வேஷம் தானே! எனவே, இந்த யசோதை முன்னும் பார்க்கிறாள்; பின்னும் பார்க்கிறாள்! பின்னே அதர்மத்தைத் துரியோதனாதியர் வடிவில் அதம் செய்யப்போகும் கள்ளக் கிருஷ்ணனே, முன்னாளில் அதர்மத்தை ராவணாதி ராட்சஸர்களின் வடிவிலே வதம் செய்தானும்.

அப்படிப்பட்ட கைகளால் சப்பாணி கொட்டியருளவேணும்—என்று பாடும் பெரியாழ்வாருள்ளம் ராமாவதாரத்திற்கு முன்னும் விரைந்து செல்லுகிறது. "யசோதை வளர்க்கும் இந்தத் 'தேவகி சிங்கம்' சிங்க உருவத்திலும் தர்மத்தைக் காப்பாற்றி இரணிய உருவத்திலே வந்த அதர்மத்தைப் பிளந்து தள்ளிவிட்டதாம்.

பலத்திற்கு மேலான பலத்தையும், கொடுமைக்கு மேலான கொடுமையையும் காட்டி இரணியனது பயங்கர ஆட்சியை அதிபயங்கர சொரூபத்தால் முடித்துவிட்ட அந்த லீலையை—அந்தச் சேஷ்டையை—ச் செய்தருளிய அதே ஸர்வ சக்திதான் இப்போது

கண்ணனுக்கிக் கைதட்டி விளையாடுகிறதென்று பாடுகிறார் பெரியாழ்வார்.

அந்த நிகழ்ச்சியை நினைத்துப் பாடும்போதே, அந்தக் கோபாக்னியும் பயாக்னியும் சாந்த மயமான பெரியாழ்வார் வாக்கிலும் ஜொலிப்பதுபோலத் தோன்றுகிறது.

அளந்திட்ட தூணை அவன்தட்ட ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க உருவாய்
உளம்தொட்(டு) இரணியன் ஒண்மார் பகலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி! பேய்முலை உண்டானே!
[சப்பாணி!

[அளந்திட்ட-தானே அளந்து பொருந்தப் பார்த்துக் கட்டிய. வாள்உகிர்-கூர்மையான நகங்கள். தொட்டு-சோதித்துப் பார்த்து. ஒண் மார்பு-ஒளி பொருந்திய மார்பு.]

என்று பாடுவதைக் கேளுங்கள்.

துஷ்டர்களை (அசுரரானாலும் அரசரானாலும்) நிக்கிரகம் செய்யும் துஷ்டப்பிள்ளை தாய்போல் வந்த பேயையும் வதம் செய்துவிட்டான்! எனவே, கிருஷ்ண சக்தி அக்கிரமத்தையும் அழித்துவிடும்; பொய் வேஷத்தையும் கிழித்துவிடும்! இப்படி அசுர சக்திகளையும், வேஷம் போடும் மோசங்களையும் ஒருங்கே அழிக்கும் கைகளால் சப்பாணி கொட்டியருளவேணும் என்கிறார் பெரியாழ்வார்.

கண்ணா! அழிவும் உன் விளையாட்டு; ஆக்கமும் உன் விளையாட்டே! இன்றும் விளையாடுகிறாய்; என்றும் விளையாடுகிறாய்!

குகப்ரியை

மார்கழியின் மகத்வம்

மார்கழி என்றவுடனே நம் கண்முன் எழும் காட்சிகள் பல. அர்ஜுனனுக்கு பகவான் "மாதங்களுள் மார்கழி நான்" என்று அருளியதே நம்முன் தோன்றுகிறது. விடியற்காலையில் பக்தர்கள் உள்ளங் கசிந்துருகிப் பாடும் பாடல்கள், கோயில்களிலே நடைபெறும் தனுர்மாத பூஜையின் கோலாகலமும், சங்குகள் முழங்குவதும், மணிகள் "டணார் டணார்" என்று கோஷிப்பதும்தான் முதன்முதலாய் நமதுநினைவுக்கு வருகிறது. வீடுகளில் முதியவர்கள் அருணோதயத்துக்கு முன் எழுந்து நீராடி, பொங்கல் செய்து பூஜைக்குத் தயார் செய்வார்கள். ஆகவே மார்கழி என்றவுடன் முதன் முதல் பனியின் சிலிர்சிலிர்ப்பும், பொங்கலும் பூஜையும்தான் நமக்கு ஞாபக வருகிறது.

* * * *

இருள் பிரியவில்லை. மணி மூன்றோ நான்கோ தெரியாது. எங்கிருந்தோ இனிமையான குரலில் "தாம் திமி திமி தந்தக் கோனாரே, தீம் திமி திமி திந்தக்கோனாரே, ஆனந்தக் கோனாரே" என்ற தொடர் இசையுடன் கலந்து காற்றிலே மிதந்துவந்து நம் செவிகளுள் வீழ்கின்றது. அடாடா! யாருடைய பாடல் என்று திகைக்கிறோம்.

பாலிற்சுவை போலும் பழத்தின் மதுப்போலும்
நூலிற்சுவை போலும் நுண்பொருளைப் போற்றிரே
மண்ணாதி பூதமுதல் வகுத்ததொரு வான்பொருளை
கண்ணாரக் காணக் கருத்திசைந்து போற்றிரே

என்ற அடிகளைக் கேட்கவும் நம்முடைய ஆச்சர்யம் அதிகமாகிறது. இத்தகைய எளிய மொழிகளால் வேத வேதாந்த தத்துவங்களைப் போதிப்பவர் இடைக்காட்டு சித்தரைத் தவிர வேறு யாராக இருக்கமுடியும்? பாட்டு இடையன் பாட்டுத்தான். எம்பெருமானே இடையன்தானே. பசுபதிதான் என்று நம் மனமும் சொல்லுகிறது. இதையடுத்துச் சேகண்டியின் ஒலியும். பம்! பம்! என்று சங்கு முழங்குவது கேட்கிறது. அரைத் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ள முயற்சிக்கிறோம்.

* * * *

அடாடா! இதென்ன? தேவகானமா என்று திகைக்கிறோம். தெருக் கோடியிலிருந்து குழல் இசை மெல்ல மெல்ல நெருங்கி வருகிறது. அதையடுத்து 'ஜல் ஜல்' என்று ஜால்ராக்களின் ஓசை. திவ்ய பிரபந்தத்தின் பாசுரங்களும், தேவாரம் திருவாசகம் இவற்றின் அடிகளும் ஒன்றையொன்று தொடர்ந்து நகர்ந்து நம்மைத்தேடி நம் வீட்டுவாயிலிலேயே வந்து நின்றுவிடுகிறது. சற்று விலாசமாய் நின்றவர்கள் எல்லோரும் ஒன்று சேருகிறார்கள். ஒருவர் உயர்ந்த குரலிலே நாமாவளிகளைச் சொல்ல மற்றவர்கள் முறைவைத்துச் சொல்லிச் சொல்லிப் பரவசமாகிறார்கள். மெல்ல மெல்ல நம்மையறியாமலே நம் மனமும் வாக்கும் அந்த நாமாவளிகளை இசைக்கின்றது. எவ்வளவு நேரம் இந்த ஆனந்த வாரிதியில் மூழ்குகிறோம் என்பது நமக்கே தெரியாது. நாமாவளி முடிந்து தியாகராஜ ஸ்வாமிகளின் திவ்ய நாம கீதம் தொடங்குகிறது.

"மேலுகோவய்யா, மேலுகோ ராம" என்று பூபாளத்திலே அவர்கள் பாடும்பொழுது நமது கண்களின்முன்னே அஞ்ஞான இருள் நீங்கி ஞான சூரியன் உதிப்பதுபோல் ஒரு காட்சி தோன்றுகிறது. இத்தகைய அற்புதக் காட்சியை மார்கழியிலேயன்றி வேறெந்த மாதத்தில் காணமுடியும்?

* * * * *

மஞ்சள் நிறம் மங்கலம் எம்பெருமானுக்கு உகந்த நிறம். மார்கழியில் காலையில் கண்விழித்த உடனே மஞ்சள்நிற மலரும் கையுமாய் சின்னஞ்சிறு பெண்கள் கலைத் தெய்வத்தை வழிபடுவதைப்பார்க்கிறோம். முன்வாயில்கள் தோறும் விசித்திர விசித்திரமான கோலங்கள். அதன் நடுவே அழகுக்கு அழகு செய்வதுபோல இந்த மலர்கள் நிற்கும், அதுமட்டுமா? வைத்த கண் வாங்காமல் நம்மையே விழித்துப் பார்க்கும். அந்த நிறத்திலே தான் என்ன கவர்ச்சி! அந்த இதழிலேதான் என்ன மேன்மை! கருத்த வண்டுகள் அதிலுள்ள தேனைக் குடிக்க வட்டமிடும். இங்கும் அங்குமாக அலையும். இந்த அழகிய காட்சியை அங்கங்கே சுற்றிச் சுற்றி நின்று அழகு பார்த்து ஆனந்திப்பார்கள் அந்த இளங்குழந்தைகள். சூரியன் உச்சியை அடையுமுன் சின்னஞ்சிறு கிண்ணங்களிலே பாலைக் கொணர்ந்து அந்தப் பரங்கிப்பூவிலே நிரப்பி 'தேனொடு பாலைக் கலந்து' சூரியனுக்கு நிவேதனம் செய்து மீதியைத் தாமே குடித்துவிட்டு அந்த மலர்களை வாட்டி தட்டிக் "குட்டிப் பொங்கலிட" சேமித்து வைத்துக்கொள்வார்கள். இந்த மார்கழி முப்பது நாளும் சிறு பெண்களுக்குக் கொண்டாட்டம்தான். கேட்கவேணுமா?

மார்கழி மாதம் திருவாதிரைநாள் வரப்போகுது ஐயே! என்று நந்தன் முறையிடுகிறான். இந்த அற்புதமான திருவிழாவை நந்தன் பார்ப்பது ஆண்டைக்குப் பிடிக்கவில்லை. "மாடு தின்னும் புலையா! உனக்கு மார்கழி திருநாளா? சீ! சீ! போ! வேலைசெய்! சேரியே சொர்க்கம்" என்று போதிக்கிறான். எப்படியாவது போவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறான் அவன். உலகாயதக் கொள்கைகளிலே ஊறிக்கிடக்கும் ஆண்டைக்கும் அவனுக்கும் தர்க்கம்.

பாப்பார தெய்வமடா பலிக்காது பறையருக்கு.
காப்பாற்றமாட்டாது கைவிடும்

என்றெல்லாம் சொல்லித் தடுத்துப் பார்க்கிறான். ஆனால் நந்தனது பக்தி வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. சிதம்பர தரிசனம் காணச் சென்று விடுகிறான். இப்படி அந்த எளிய புலையனை வசீகரித்த அந்த தரிசனம் இன்று நம்மையும் 'வாருங்கள்! வாருங்கள்' என்று அழைக்கிறது. தில்லையம்பலத்திலே இந்த மார்கழித்திருநாள் வெகு விமரிசையாய் நடைபெறும். மாணிக்கவாசகர் சோதியிற் கலந்ததுதான் இந்தத்திருநாள். திருவெம்பாவை பாடி மலர் மாலையை எம்பெருமானது திருவடிகளுக்குச் சூட்டுவார்கள்.

இன்னும் சிதம்பரத்தில் நடைபெறும் ஆனந்தத்தாண்டவத்தைக்காண லக்ஷக் கணக்கான ஜனங்கள் கூடுகிறார்கள். வருடம் இருமுறை நடராஜ மூர்த்தியின் விக்ரகம் வீதியிலே பவனிவரும். ஒன்று ஆனித்திருமஞ்சனம். மற்றொன்று "தரிசனம்" முன்தினம் இரவு முழுவதும் அபிஷேகம் நடந்து கொண்டேயிருக்கும். ஆயிரக்கால் மண்டபத்தில். பொழுது புலர் புலர் என்று விடிய, பால சூரியன் தன் பொன்னிறக் கைகளால் அம் மண்டபத்தை அழகு செய்ய அதைவிட்டுப் புறப்பட்டு, மும்முறை, சிவ கங்கை என்ற குளத்தைத் திரும்பப் பார்த்துப் பின் வீதிவலம் வருவார். இந்த ஆனந்த நடனத்தைக் காணத்தான் தவங்கிடந்தான் நந்தன். இதே நடனத்தைத்தான்

எழைநக்கும் ஏழை அறிவேறே
குழைநக்கும் பிஞ்சகன் தன் கூத்து.

என்றார் வள்ளுவர்.

மாணிக்கவாசகரையும் நந்தனாரையும் ஆட்கொண்ட அந்த ஆனந்தத் தாண்டவம் சேந்தனார் என்ற பக்தருள்ளத்தையும் வசீகரித்ததில் ஆச்சர்யமென்ன? விடிந்தால் திருவாதிரை. எம்பெருமானுக்கு எதையாவது அமுது செய்விக்கவேணும் என்று ஆவல். வீடோ வறுமைக்கு இருப்பிடம் அடியார்களிற் பெரும்பாலோரின் நிலை அதுதானே. கடைகளிலே "அள்" எடுக்கிறதென்று ஒரு வழக்கம். "மிகவும் தாழ்ந்து வாடும் ஒருவன் ஒவ்வொரு கடையிலும் ஒரு பிடி எடுக்கலாம்." என்று அனுமதிப்பார்கள் வியாபாரிகள். நெடு நேரம் யோசித்தார் சேந்தனார். கடைசியாக 'அள்' எடுப்பதென்று முடிவு. கொஞ்சம் அரிசியும் வெல்லமும் எழு காய்கள் விதத்துக்கு ஒன்றாகக் கிடைத்தன. அரிசியைக் களி கிளறி, அந்தக்குழம்பையும் இலையிலே படைத்தார்.

அங்கே கோயிலில் அலங்காரம் முடிந்தது: புறப்படும் நேரமாயிற்று. சுவாமியை அசைக்கவேமுடியவில்லை. ஒருவருக்காவது விஷயம் விளங்கவில்லை. திடீரென்று அந்த மண்டபமுழுவதும் ஒரே வாசனை. 'இதென்ன மணம்? எங்கிருந்து வருகிறது?' என்று திகைத்தார்கள் தீக்ஷிதர்கள்.

அன்றிரவு தீக்ஷிதர்கள் கனவிலே சேந்தனார்வீட்டிலே களியுண்டதைச் சொன்னாராம். இன்னும் சிவனடியார்களின் வீடுகளிலே, ''களியும் எழு கறிக்குழம்பும்'' அமுது செய்கிறான் நடனராஜன்.

* * * * *

மார்கழியிலே விஷ்ணு பக்தர்கள் நெஞ்சிலே இடம் பெறுவது இரண்டே விஷயங்கள். ஒன்று சூடிக்கொடுத்த சுடர்க்கொடியும் அவள் திருப்பாவையும், மற்றொன்று வைகுண்ட ஏகாதசி. ஆனந்தமாய்ப் பாடிக் கொண்டே தாராளமாக வைகுண்ட வாயிலில் நுழைந்துவிடலாம். பாடல் பெற்ற திருக்கோயில்களிலே பகல் பத்து, இராபத்து உற்சவங்கள் இதற்கிடையிலேதான் வைகுண்ட ஏகாதசி. இந்த உற்சவத்தைக் காண்பதுதான் கண் பெற்ற பயன் எனலாம். அவ்வளவு விமரிசையாக இன்னும் நடைபெறுகின்றது. நம்மெல்லோரையும் வாருங்கள் வாருங்கள் என்று அழைக்கின்றது. இவ்வளவு சுலபமாக வைகுண்டம் கிடைப்பதானால் போவதற்கென்ன தடை?

* * * * *

'கேட்டதை எல்லாம் கொடுப்பாயா? கொடுப்பேனென்று முரசு அறைந்து கொடுக்கிறாயாமே?' என்றார் ஒரு சிவனடியார். ''ஆம்'' என்றார் இயற்பகைச் செட்டியார். ''ஆனால் உம்முடைய மனைவியாரைக் கொடுத்து விடும்'' என்றார்.

''வசுமதீ! என்று அழைத்தார் செட்டியார், 'பிச்சையாண்டிக்கு உன்னை அளித்தேன்' என்றார். பிச்சைக்காரன் அவ்வளவோடு நிற்கவில்லை. ''ஊரார் உன்னையும் என்னையும் நிந்திப்பார், இந்த ஊர் எல்லைவரையில் துணைவரவேணும்'' என்றார். அதற்கும் ''இதோ'' என்றெழுந்தார். ஊர் வாயை மூடமுடியுமா? ஊரார்வந்து சிவனடியாரையும், செட்டியாரையும், வசுமதியையும் வளைத்துக்கொண்டு அடிக்கிறார்கள். பலர் சேதம். கடைசியில் பிச்சைக்காரன் சுயரூபத்தோடு காட்சி தருகிறான். இந்த அற்புதத்திற்கு ஆதாரமானவராகிய இயற்பகையார் பிறந்தது மார்கழியில்தான்.

இதுமட்டுமல்ல, இன்னும். வாயிலார், சடையர், சாக்கியர் முதலிய பெரியோர்கள் அவதரித்ததும் இந்த மாதம்தான். 'விப்ரநாராயணர்' என்று தொண்டர்குலம்போற்றும் தொண்டரடிப்பொடி ஆழ்வார் பிறந்ததும் இந்த மார்கழியிலேதான் என்றால் இதைக் காட்டிலும் வேறு பெருமையும் வேண்டுமா?

என்னே இவ்வுலகம்!

ஸ்ரீ. ஜானம்மாள்

''ஒழுங்கு இல்லாவிட்டால் உலகமே குட்டிச்சுவர்தான். இருக்கவேண்டிய இடத்தில் எல்லாம்தக்கவாறு அமைந்திருந்தால்தான் காரியங்கள் தடைப்படாமல் நடைபெறமுடியும். இந்தவீட்டில் நான்ஒருத்தி கவனித்தால்தான் உண்டு. இல்லையாகில் நடையில் விழுந்திருக்கும் வாழைப்பழத் தோலைக்கூட குனிந்து எடுத்து வெளியில் எறியமாட்டீர்கள். வேலையென்றால் தொல்லையென்பர். பணியாள் செய்யும் வேலையை நாம் செய்யும்படி நேரிட்டுவிட்டதே என்று முணுமுணுப்பார். புதிய நாகரீகத்தின் கோலம் இது. உலகில் கல்வியோ ஒருபுறம் விரிவடைந்துகொண்டு

43

எங்கும் இன்பநாதம் ஒலிக்கின்றது. மேள சப்தம் ஆனந்தமாக அண்டத்தை அளாவுகிறது; வந்திருப்பவர்களின் உள்ளத்தில் சந்தோஷ வெறி தாண்டவமாடுகிறது. பக்திப் பரவசத்தால் "ஆஹா ஹா!" என்று ஆர்ப்பரிக்கும் பக்தகோடிகளில் நமது ஸ்ரீதரனும் ஒருவனாகத்தான் நிற்கிறானெனினும் அவனது இதயத்தில் எத்தனையோ விதமான எந்திரங்கள் வேலைசெய்கின்ற ரகஸியம் அங்கு பவனிவரும் எம்பெருமானுக்குத் தவிர வேறுயாருக்குத் தெரியும்?

சந்திராவுக்குக் கடிதமெழுதிய பிறகு தினம் அதற்குப் பதில் வரும் வரும் என்று எதிர்பார்த்துப் பெரிய ஏமாற்றத்தை யடைந்ததால் மனது எண்ணாததும் எண்ணித் தவிக்கின்றது. "என்னுடைய கடிதம் ஒருவேளை சந்திராவிடம் சேராமல் வேறு யார் கையிலாவது அகப்பட்டு அதனால் ஏதேனும் விபரீதம் நடந்திருக்குமா? அல்லது நான் எழுதியதைக் குற்றமாகவே மதித்துச் சந்திரா பதில் போடாதிருக்கிறாளா!... அப்படி என்னிதய ராணி இருக்கமாட்டாளே! எதற்கும் ஒருபதில் கட்டாயம் வரும் என்றல்லவா எண்ணினேன். என்னால் ஒரு அணுவளவு உபகாரம் இல்லை யெனினும் அபகாரமும், உபத்திரவமும் இல்லாதிருந்தால் போதுமே!" என்கிற திகில் பிடித்துக்கொண்டு ஆட்டுகிறது.

அவன் தகப்பனாருக்கு முற்றிலும் ப்ரமை தெளிந்துவிட்டதென்றாலும் பங்களாவிலுள்ள கோவில் பகவானை ஸேவிக்கவேண்டுமென்கிற வெறியும் பிடிவாதமும் மும்முரமாகிவிட்டதால் தானாக எழுந்து "இதோ போய்விடுகிறேன்; இதோ நானே போகிறேன். என்ன செய்துவிடுவான் பார்க்கலாம்?" என்றெல்லாம் முரட்டுத்தனம் செய்வதை ஸ்ரீதரனால் சகிக்கவே முடியவில்லை. அவரை எப்போதும் கட்டிக் காத்துவருவது அவனுக்கு மிக்க ச்ரமமாக இருந்தது. தான் நேரில்போய் சந்திராவைப் பார்ப்பதற்கும் அவன் மனது இடங்கொடுக்கவில்லையாதலால் இதே ஏக்கமாகக் குழம்பிக்கொண்டிருந்தான்.

அன்று கோயிலில் ப்ரம்மாண்டமான உத்ஸவம். ஸ்வாமி புறப்பாடு அதிவிமர்சையாக நடப்பதால் ஸ்வாமியுடன் கூடவே கும்பலில் கோவிந்தாவாகத் தான் வந்தால், ஸ்வாமி தரிசனம் செய்ய சந்திரா வீதியில் வரமாட்டாளா! அப்போது ஏதாவது ஜாடையிலாகிலும் விஷயமறியக் கூடுமா! என்கிற பேராவலில் அதிகாலையிலேயே ஸ்வாமியுடன்கூட வந்தான்.

உயர்ந்த நாகஸ்வர வித்வானின் மேளமிருப்பதால் கூட்டம் கணக்கற்றுவிட்டது. கூட்டத்தோடு கூட்டமாக வரும் ஸ்ரீதரனின் கண்கள் மட்டும் சந்திராவின் பங்களாப் பக்கமே தேடியலைகின்றன. 'ஸ்வாமி இன்னும் அதன் வாசல்பக்கம் வரவில்லையே சீக்கிரம் வரக்கூடாதா?' என்று வெகு பதைப்புடன் எதிர்பார்க்கிறான்.

ஸ்வாமியோ, பக்தகோடிகளுக்கு வெகு ஆனந்தமான தரிசனம் கொடுத்தவாறு அவர்கள் அன்போடு அளிக்கும் காணிக்கைகளை ஆசையுடன் ஏற்று மகிழ்ந்து மந்தகாஸம் செய்த வண்ணம் நிதானமாக பவனிவருகிருர். இந்த திவ்ய ஸேவையைத் தரிசிப்பதற்காகவே பலபேர்கள் லீவு வாங்கிக்கொண்டு வருகிருர்கள். அத்தகையவர்களுக்கு ஸ்வாமி இன்னும் சிறிதுநேரம் தாமதமாக எள்ள மாட்டாரா! என்று தோன்றுகிறது. பகவத் ஸேவை எல்லோருக்கும் ஒன்றேயாயினும் அவரவர்களின் உணர்ச்சிகளும் மனேபாவங்களும் வேறல்லவா!

சந்திராவின் வீட்டுவாசலுக்கு ஸ்வாமி வந்ததும் ஸ்ரீதரன் அந்த வீட்டையே கவனித்தான். ஸ்வாமி தரிசனம் செய்ய பங்களா வாசலில் ஒரு வேலைக்காரனைத் தவிர வேறு யாரும் காணுததால் திக்கென்று தூக்கிவாரிப்போட்டது. ஒருவேளை தாமதமாக வருகிருர்களோ! என்று நினைத்தான். முற்றிலும் ஏமாற்றம், சேவகனும் ஒரு வேட்டைநாயுந்தான் இருந்தது.

ஏற்கெனவே தத்தளிக்கும் ஸ்ரீதரனின் மனது பின்னும் கலக்கமடைந்து எண்ணுததும் எண்ணித் துடிக்கின்றது. அந்த காவல்காரனிடமே விஷயத்தை எப்படியாவது கேட்டு அறியவேண்டும் என்று தடுக்கமுடியாத பேராவல் உண்டாகியதால் கும்பலுக்குள் புகுந்து சேவகனிடம் சென்று....''எஜமானர் இருக்கிருரா? என்று கேட்டான்.

வேலை:—எஜமானர் ஊரிலில்லையே! அவரை சுப்பராமபுரத்திற்கு மாற்றிவிட்டார்களே தெரியாதுங்களா...பேப்பர்லேகூடவந்ததே...

ஸ்ரீதரன்:—அப்படியா...பேப்பர் பார்க்கவில்லை. அவர் குடும்பத்துடன் போயிருக்கிருரா...இங்கு யார் இருக்கிருர்கள்?

சேவ:—இப்போது சத்தியாக பங்களாவில் யாருமே இல்லை. நான்தானிருக்கிறேன். எஜமானர் சின்னம்மாளையும் வேலைக்காரியையும் அழைத்துக்கொண்டு போயிருக்கிருர்...எஜமானியம்மாளும் பெரியம்மாளும் பெரிய பெண்ணும் கற்பனைக்கோட்டையிலேயே இருக்காங்க. ஒரு சமயம் வெள்ளிக்கிழமை எஜமானரும் சின்னம்மாளும் வரலாம் என்று எதிர்பார்க்கிறேன். இந்த பங்களாவிலுள்ள சோபில் சாமிக்கு ஏதோ உத்ஸவம். அதற்கு எஜமான் பக்கத்திலிருந்துதான் நடத்துகிற வழக்கம். கோயில் மானேஜர் கடிதம் எழுதியிருக்கிருர்...நீங்கள் யாரு தெரியவில்லையே!

ஸ்ரீதரன்:—நான் அவருக்குத் தெரிந்தவன்தான். ஸ்வாமி தரிசனத்துக்குக்கூட வரவில்லையே என்று கேட்டேன், நான் வருகிறேன்—என்று கூறிவிட்டு வெளியேவந்தான். எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தது ஒருபுறமிருக்க, தன் கடிதம் யார் கையில் கிடைத்து விஷயம் எப்படியாகியதோ என்கிற புதிய ஏக்கமும் கலவரமும் உண்டாயின.

வெள்ளிக்கிழமை ஒருகால் வரலாம் என்று சொல்லிய வார்த்தையில் கடுகளவு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் உண்டாகியதால் மீண்டும்ஸ்வாமியுடன் கூடவே நடந்தான். கூறத்திறமற்ற சங்கடம் மனத்தில் வதைப்பதால் ஸ்வாமிகோயிலுக்குப் போவதற்கு முன்பே அவன் வீட்டிற்கு வந்துசேர்ந்தான்.

மணி அதிகமாகிவிட்டதால் ஸ்ரீதரன் மனைவி இன்னும் தன் புருஷன் சாப்பிடவரவில்லையே என்று வீதியிலேயே எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். வாடி வதங்கித் துவண்டு ஏதோ நடைச் சித்திரம்போல் வரும் ஸ்ரீதரனைப்பார்த்த ஊமைக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் உண்டாகியது. ஒப்புயர்வற்றத் தன் பாஷையினால், "ஏன் சாப்பிட வரவில்லை? ஆபீஸுக்கு நேரமாகிவிட்டதே. இலை போட்டிருக்கிறேன். வாருங்கள்!' என்று சொன்னாள்.

ஸ்ரீதரன் ஒருவருக்கும் சந்தேகம் உண்டாகாதபடி பிடித்ததோ, இல்லையோ சாப்பிட்டுக் கடனை முடித்துக்கொண்டு வந்து "அப்பா சாப்பிட்டாயிற்றா!" என்று கேட்டான். "இன்னும் இல்லை" என்று கூறியபடியே கிழவருடைய ரூமுக்குப் போனாள். ஸ்ரீதரனும் பின்னாலேயே போனான். அங்கு கதவு வெறுமை சாத்தியிருந்தது. உள்ளே ஆளைக் காணவில்லை. சாதாரணமாக அவர் தனிமையில் எங்கும் போகிற வழக்கமே இல்லை. எங்கு போனாலும் அவரைக் கூட அழைத்துப்போக ஒரு தனி ஆளை ஸ்ரீதரன் வைத்திருந்தான்.

தகப்பனாரைக் காணாததால், "அப்பா! அப்பா!" என்று கூப்பிட்டான் 'முருகேசா!',..என்று வேலைக்காரனைக் கூப்பிட்டு, "அப்பா எங்கேடா!" என்றான். வேலைக்காரன் பதறிப்போய், "எனக்குத் தெரியாதே. அப்பாவின் துணிகளை மாடியில் உலர்த்தப் போயிருந்தேன். அவர் உள்ளேதானே புத்தகம் ஏதோ படித்துக் கொண்டிருந்தாரே...ஏன்...எங்கேபோனார்?" என்று வியப்புடன் கேட்டான்.

ஸ்ரீதரனுக்குப் பெருத்த குழப்பமுண்டாகிவிட்டது. வீடு பூராவும் தேடினான். எங்கும் காணவில்லை. அவர் படித்துக்கொண்டிருந்த புத்தகம் அப்படியே திறந்து கிடந்தது. தன் மாமியாரிடம் சென்று "மாமீ!...அப்பா எங்குபோனார் தெரியுமா?" என்றான். அவளும் "எனக்குத் தெரியாதே...உள்ளேதானே படித்துக் கொண்டிருந்தார். சாப்பிடக் கூப்பிட்டேன். பசியில்லை என்று சொன்னார். எங்கேயும் தனியாகப் போகமாட்டாரே...மாடியில் பார்த்தாயா!" என்றாள்.

"எங்கும் பார்த்தாயிற்று. இப்போது என்ன செய்வேன்... எங்கு தேட முடியும்...ஐயோ!...மறுபடியும் புத்தி ஸ்வாதீனமில்லாது போயிருக்குமோ! ஒருவேளை அந்தக் கோளாறினால் எங்கேனும் ஓடியிருப்பாரா?"...என்று மனது தவிக்கிறது. வேலைக்காரனை ஒருபுறம் தேட அனுப்பினான். தான் ஒருபுறம் தேடக் கிளம்பினான். தனி

மையில் சென்ற பழக்கமில்லாத மனிதனை எங்கே தேடுவது, எப்படித்தான் கண்டுபிடிப்பது? "பூப்பட்ட கண்ணில் குச்சியும் போத்தியதாம்" என்பதுபோல் ஏற்கெனவே தத்தளிக்கும் மனத்திற்கு இதுவும் ஒரு சோதனை உண்டானால் என்னதான் செய்வது?

44

தாவண்டு ஆடிய சரீரத்தின் நிலைமை தாங்காது கீழேவிழுந்து விடுவாளோ! என்று ஐயுறும்படியாக உடம்பு ஆடுவதைக் கண்ட சேகர் தணிந்த குரலில் அன்பு ததும்பும் பெருந்தன்மையான, மாசற்ற பார்வையில் விசனமும், பச்சாத்தாபமும் முகத்தில் தேங்க..."சந்திரா!...விழப்போகிறாயம்மா!...உட்காரு...நான் இப்போதுதான்வந்தேன். உன் கடிதங்களை நான் பார்க்கவும் இல்லை. பார்க்க ப்ரியப்படவுமில்லை. நீ வீணாகப் பயந்து நடுங்காதேம்மா... நான் உனக்கு அனுகூலமானவனே யன்றி சத்ரு இல்லை. உன்னிதயத்தில் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தைக்கொடுத்து உன் உடன் பிறந்த சகோதரி என்று நம்பி அளவிலாத வாஞ்சையை அன்பை... நம்பிக்கையை...அள்ளிவீசியிருக்கும் உன் தமக்கையைப்போல்நான் உனக்குச் சத்ருவில்லை....பயப்படாதே...முதலில் உன் காரியங்கள் முடியட்டும். நான் இதோ இங்கு உட்கார்ந்திருக்கிறேன்" என்று கூறி ஒரு சோபாவில் உட்கார்ந்தான்.

சந்திரா, தன் கண்களையும் காதுகளையும் நம்பவே முடியாது திகைத்தபடியே, "அத்திம்பேர்!...அத்திம்பேரா...என்று குரல் நடுங்கத் தடுமாறியவாறு இழுத்தாள்.

சேகர்:—ஆம்....சந்திரா!....நீ பயப்படாதே...என் இப்படி பயந்து நடுங்குகிறாய்...உன் தமக்கையின் பொறாமை பாணத்தின் ப்ரயோகத்தை நான் அறியாத முட்டாள் இல்லை. முதலில் நீ உட்காரு சந்திரா...

சந்திராவின் வேதனை பின்னும் பதின்மடங்காக அதிகரித்தது. அவளுடைய இதயம் வெடித்துவிடும்போல் சங்கடமும் அதிர்ச்சியும் உண்டாகியதால்..."அத்திம்பேர்...நீங்கள்...இப்போதேவா வந்தீர்கள்...நேற்றுதானே ஸீமந்தமாயிற்று...எங்கம்மா, அப்பா எங்கே? அவர்கள் வரவில்லையா!...அக்கா ஸவுக்யமாயிருக்கிறாளா... என்று துக்கம் தேங்கிய குரலுடன் கேட்டாள்.

சேக:—ஆம் நேற்றுதான் ஸீமந்தமென்கிற கடைசீ சடங்கு முடிந்தது. உன் தாய் தகப்பனார் இன்னும் வரவில்லை. நான்மட்டும் உன்னிடம் நேரில் விஷயத்தைக்கூறி மன்னிப்புக் கேட்கவேதான் வந்தேன்.

சங்:—ஆ!...என்னிடம் மன்னிப்பா...ஐயோ...இதென்ன விபரீத வார்த்தை...ஏற்கெனவே மனப்புண்ணுடன் தத்தளிக்கும் என்னை ஏன் இன்னும் குத்திக்கிளறவேண்டும்?...அத்திம்பேர்...என்னை மன்னித்து தயவுசெய்து நீங்கள் எழுந்துபோய்விடுங்கள்...தயவு செய்து போய்விடுங்கள். எனக்கு ஒருவர்மீதும் கோபமோ, மனஸ்தாபமோ இல்லை...பகவான்மீது சாக்ஷியாக இல்லை...என்பிறவிதான் எனக்குச் சத்ருவே யன்றி எனக்கு வேறு சத்துருக்களேயில்லை....

சேகர்:—சந்திரா...இனி என்னால் உனக்கு எவ்விதமான தீங்கும் உண்டாகாது. அதற்காக நான் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாகிவிட்டது. இளந்தளிர்போன்ற உன்னை எப்படித்தான் கருக வைத்துவிட்டாள் என்பதை நான் அறிந்துகொண்டேன்...சந்திரா! சந்திரா...இதோ பாரம்மா...புலம்பாதே...எலும்புருக்கி நோயின் பூச்சிக்கும் மேலான சக்தியுடைய உன் தமக்கையின் பொறுமையை நான் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டுகொண்டேன். அதனாலேயே இங்குவந்தேன்.

சங்:—ஐயோ! அத்திம்பேர்...அனாவச்யமாக என் தமக்கையை நீங்கள் ஏன் பழிக்கவேண்டும்? அவள்மீது ஒரு குற்றமும் இல்லையே.

சே:—ஆம்...ஒரு குற்றமும் இல்லை...அவள் நிரபராதி, மகா பரிசுத்தை. மேன்மையான குணத்தைப் படைத்துள்ள ரத்தினம், சந்திரா...உன் காலில் ஒட்டிய தூசியை மிதிக்கவும் யோக்யதையற்றப் பிண்டம் அவள் என்று எனக்கு முன்பே தெரிந்திருந்தால் அந்த மூதேவியை நான் மணந்தே இருக்கமாட்டேன். மூதேவியை ஸ்ரீதேவி என்று ஏமாந்தது எனது முட்டாள்தனம் என்பதை இப்போது உணர்ந்து துடிக்கிறேன். இனி நீ என்னிடத்தில் ஒளிப்பதில் உபயோகமில்லை. உங்கள் குடும்பத்தின் அன்யோன்ய பாவத்தையும் அழுகையும் சிதறவடித்த கூரிய கத்தி இதுதானே...சந்திரா...இதுதானே...பாரு'' என்று ஒரு பழைய கடிதத்தைக் காட்டினான்.

சந்திராவின் உள்ளம் துடிதுடித்தது..."ஐயோ!''...என்று ஒரு கத்து கத்திவிட்டாள். ஆதியில் தனக்குத் தன் தமக்கை எழுதிய கடிதம்—எப்படியோ, எங்கேயோ மாயமாய் மறைந்துவிட்டதாக எண்ணிய கடிதம்—இப்போது சேகர் கையில் கண்டதும் அந்த அதிர்ச்சியை எப்படித் தாங்கமுடியும்? "ஐயோ...இப்படிக் கொடுத்துவிடுங்கள்...இப்படித் தாருங்கள்...அத்திம்பேர்...அத்திம்பேர்...உங்கள் காலைப் பிடித்துக்கொள்ளுகிறேன். இதெப்படித் தங்கள் கைக்கு எட்டியது?''...என்று துடித்தாள்.

சேக:—சந்திரா! கடவுள் சாக்ஷியாக நான் கனவில்கூட உனக்கு துரோகத்தை நினைக்கவில்லை. என்னைப் படைத்த ஆண்டவன்மீது ஆணையாக என் பரிசுத்தமான இதயம் துலங்குகிறது என்பதை நீ அறிந்து, வீண்குழப்பத்தில் தத்தளிக்கும் அழுக்கை நீக்கவே நான் இங்குவந்தேன்...அக்கடிதமே உங்கள் அன்பைக்குலைத்த எரிமலை என்பதோடு நில்லாது, என் தலையிலும் பெரும்பாறையைப்

புரட்டிய ரகஸியத்தை நேற்றுதான் அறிந்தேன்...சந்திரா!...உன் தமக்கை எலும்புருக்கி நோய்புழுகினும் கேவலமான புழுவென்பது இனிமேல் உறுதிதானே...எந்த நினைவு பிசகினாலோ இந்த காகிதத்தை உடனே கிழிக்காமல், கொளுத்தாமல் அச் சமயம் பத்திரமாகப் பதுக்கிக்கொள்ளவேண்டி இரும்புப்பெட்டிக் கள்ளறையில் வைத்துவிட்டாள். பிறகு இதைப்பற்றி மறந்துவிட்டதோ என்றுதான் நினைக்கிறேன். இந்த போதாக்காலக் கடிதத்தை அவள் மீண்டும் தேடியிருக்கவேண்டும். அது எப்படியோ என்னுடைய முக்யமான டாக்குமெண்டுகள், ரசீதுகள் உள்ள கடிதங்களுடன் கலந்துவிட்டது. நான் முக்ய காரியமாக நேற்று இந்த கட்டுக்களைக் கிளறும்போது இது கிடைத்தது. இதைப் பார்த்தவுடனே என் னிதயம் வெடித்துவிடும்போலிருந்தது. உடனே அந்த படுநீலியிடம் காட்டுவதற்கு நினைத்தேன்...கர்ப்பிணி...பலஹீன ஸ்திதியிலிருக்கிறாள். பலர் முன்பு கல்யாணப் பெண்ணாக வீற்றிருக்கிறாள். அச் சமயம் நாம் கலவரப்படுத்துவதால் ஊர் சிரித்துவிடும் என்று தோன்றியதால் என்னையே நான் சற்று சமாளித்துக்கொண்டேன்.

எனினும் உன்னுடைய பரிதாபம் என்னை வாட்டி வதக்கியது. அதனால் உடனே உன்னிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு போகவே ஓடிவந்தேன்...சந்திரா!...அந்த மகாபாதகிஎழுதியிருப்பது போல் ஒருவிதமான குற்றமும் என்னிடம் இல்லை என்பதை ஈச்வர சாக்ஷியாகக் கூறுகிறேன். நீ அதை நம்பியிருந்தாயானால் இனிமேலாவது அந்த அநியாய எண்ணத்தை விட்டு என்னை பரிசுத்தவான் என்று நம்பு. நான்போகிறேன்....ஒருவரையொருவர் நம்பாது சந்தேகங்கொண்டு இத்தனை தூரம் விளைவித்ததன் பலனை பகவான் கைம்மேல் கொடுப்பார்...நான் வருகிறேன்...இனி என்னைப் பழய சேகரனாகப் பார்க்கமுடியாது. அந்த பாதகிக்கும் எனக்கும் இருந்த பந்தம் தொலைந்தது. நான் வருகிறேன்...குழந்தாய்! பகவான் உன்னை வாத்ஸல்ய குணத்துடன் சர்வமங்களத்தையுங் கொடுத்துக் காப்பாராக...என்று கூறி எழுந்தான்.

சந்திராவுக்குத் தலை சுழலுகிறது. இன்னதுதான் செய்கிறதென்று தெரியாது சித்திரவதை செய்கிறது. சேகரனின் முடிவு வார்த்தை அவள் இதயத்தைப் பிளக்கின்றது...சேகரனின் காலில் தடாரென்று விழுந்து பிடித்துக்கொண்டு, "அத்திம்பேர்!...அத்திம்பேர்!...சத்தியமாக நான் உங்களை பரிசுத்தாத்மா என்று நம்புகிறேன்...அது இன்றல்ல...என்றும் அப்படித்தான் நினைத்திருக்கிறேன். நான் மகாபாதகத்தைச் செய்து இந்த ஜென்மம் எடுத்திருக்கிறேன். எனது கர்மவினை இப்படியெல்லாம் ஆட்டியதே யன்றி தங்களுடைய தவறோ என் சகோதரியின் குற்றமோ எதுவுமில்லை. அதோடு என் சகோதரி என்மீது பழியைச் சுமத்திதானே எழுதியிருக்கிறாள். தாங்கள் பூர்ண கர்ப்பிணியாகிய என் சகோதரியை

மன்னிக்கக்கூடாதா! என் தலையில் படாப்பழியைச் சுமத்தி யிருக்க அதை நான் பொறுக்கவில்லையா?

நீங்கள் உண்மையாக என்னை ஆசீர்வதிக்கும் மனிதராக இருந்தால் என் சகோதரியைக் கைவிடக்கூடாது. இக்கடிதத்தை என்னிடம் கொடுத்துவிடுங்கள். இந்த விஷயத்தை நீங்கள் சத்திய மாக யாரிடமும் கூறக்கூடாது. இது இப்படியே அமுங்கிவிட வேண்டும்... அத்திம்பேர்... அத்திம்பேர்... என்று கதறினாள்.

சே:—சந்திரா!...எழுந்திரு...எழுந்திரம்மா...உன்னுடைய ஒப் புயர்வற்ற குணத்தின் அழகு உலகையே ஈடாக வைத்தாலும் ஈடா காது...குழந்தாய்...நீ சிறியவள், உலகானுபவம் இல்லாதவள்... உன் தமக்கையின் கொடிய செய்கையை பகவான்கூட மன்னிக்க மாட்டான்...அவளுடையநடத்தையும்செய்கையும் எனக்குத்தெரியா தென்று நினைத்தாயா! நான் துர்மார்க்கத்தனமாய் நடப்பதாக பெற் றோர்களிடம் தீமூட்டியிருப்பதால்தான் அவர்கள் இத்தனை மாறுத லடைந்து நடந்துவருகிறார்கள். உன் பெற்றோர்களுடைய மனத் தையும் கலைத்து என்மீது கெட்ட அபிப்பிராயத்தை உண்டாக்கி யிருக்கும் மர்மத்தை அறியாது அவர்களையும் நான் முதலில் வித்யா ஸமாக எண்ணினேன். இப்போது எனக்கு வெட்டவெளியாகி விட்டது. என்னுடைய முறிந்த மனத்தை இனி இத்தனை சடுதியில் ஒட்டவைக்க முடியாது. நான் போகிறேன்...நீ ஸாரநாதனை மணந்து செல்வச் சீமாட்டியாய் சர்வமங்களத்துடன் இருக்க பகவானை பிரார்த்திக்கின்றேன்-என்று கூறிவிட்டு விசையாக நடக்க வாரம்பித்தான்...

சந்திரா நிலை தடுமாறியவாறு, 'ஐயோ! அத்திம்பேர்!...அத் திம்பேர்' என்று கூவிக்கொண்டே பின்னால் ஓடிவந்தாள்..."அத்திம் பேர்...அத்திம்பேராம்...அத்திம்பேர்...சொத்தை வேர் என்று கூப்பிடு...சந்திரா...நில்லு...இந்த கிராதகன் இங்கு எப்படி வந் தான்? காம்புக்குப் போவது இதுதானா...அம்ருதவல்லி!...நாடகத் தைப் பார்த்தாயா?"...என்று நரஸிம்மன் கர்ஜித்தபடியே சேகரை வெகு அலக்ஷியமாகப் பேசி உதாசீனமாகப் பார்த்து வழிமறித்தார்.

அம்ருதவல்லியம்மாள் சந்திராவைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு..."ஐயோகண்ராவியே!..இந்தப் பரதேசிக் குழந்தையைக் கொலை செய்வதற்கு வருவதையா கம்பீரமாகக் காம்புக்குக் போவதாகச் சொல்லிவிட்டு வரவேண்டும்...தூத்து.... மானங் கெட்ட...என்று வெடுக்கென்று வாயில் வந்துவிட்ட சமயம் சந்திரா தாயாரின் வாயைப் பொத்தி "அம்மா...இதென்ன பேச்சு... என்றாளேயன்றி மேலே பேசமுடியவில்லை. என்ன விபரீதம் நடந்து விடுமோ...என்ன போதாக் காலத்திற்காக இப்படி எல்லோரும் ஒன்றாக வந்துவிட்டார்களோ?...என்று சந்திராவுக்குக் குலை நடுங்குகிறது. பேந்தப்பேந்த விழித்துக்கண்ணீர் சொறிகிறாள்.

சேகரின் பொறுமை எல்லை கடந்தது...“மாமா !....மாமீ!... உலகத்திலேயே பழியோரிடம் பண்டமோரிடம் என்கிற வசனம் பெரும்பாலும் உண்மையாகவே நடக்கிறது. உங்கள்மீது குற்ற மில்லை. உங்கள் வயிற்றை அலம்பி மாணிக்கத்தைப் பெற்றீர்களே அந்த அழகின் வள்ளல் இது. நானும் ஒரு உணர்ச்சியுள்ள மனிதன் தான். வெறும் கட்டையல்ல. கல்லல்ல...

உங்கள் குடும்பத்தில் வெகு அழகாய் படர்ந்துவந்த அன்புக் கொடியை வேரறுத்து மன வேற்றுமையையும், கூறத்திறமற்ற கசப்பையும் உண்டாக்கிய உங்கள் பெரிய புதல்வியின் ப்ரதாபத்தை இதோ...இதுவிளக்கிக் காட்டும்...இனி வீணாக யார்மீதும் அபாண்ட பழியைச் சுமத்தி வீண் ரஸாபாஸத்திற்கு இடங் கொடுக்கவேண்டாம். இதை நேரில்கூறி இந்த பரம ஸாதுவான குழந்தையிடம் ஆயிரம் மன்னிப்பைப் பெறுவதற்காகத்தான் நான் நேரில் வந்தேன்...நமஸ்காரம்...இனி இந்த சேகரைக் காண்பது இதுதான் கடைசீதரம்...என்று கடுமையான த்வனியில் கூறிக் கொண்டே கடிதத்தை மாமனார் காலில் வீசி எறிந்துவிட்டு ஓட்டமாகச் சென்று மறைந்தான்.

அந்தோ பரிதாபம்! சந்திராவின் இதயத்துடிப்பின் வேகத்தை கூறமுடியுமா ! நரஸிம்மனும், அமிருதவல்லியும் கடிதத்தைப் படிக்க விடாது சந்திரா பிடுங்கிக்கொள்ள எத்தனையோ ப்ரயாசைப்பட்டும் ஏற்கெனவே கிழிந்துள்ள கடிதம் பின்னும் கிழிந்தது. நரஸிம்மன் கடிதத்தைக் கொடுக்க மறுத்து வெகு விரைவில் படித்தும் விட்டார்...

கண்களில் நெருப்புப் பொறிபறக்க அமிருதவல்லியிடம் கொடுத்து, “அம்ருதா...எனக்கு இப்போதுள்ள மன நிலைமையில் நாக்கைப் பிடுங்கிக்கொள்ளலாம்போலிருக்கிறது. இக் குடும்பத்தின் சந்தோஷக் கொடியைக் கத்தரித்த கத்தி எது என்று தெரியாது விழித்தோமே...அக்கத்தி நம் வயிற்றுப்பூச்சியே என்பதையறிய எப்படித்தான் சங்கடம் செய்கிறது தெரியுமா...சந்திராவைப் போன்ற பெண் இனி இவ்வுலகில் கிடைக்குமா...கண்ணே...சந் திரா !” என்று சந்திராவைத் தம் இரு கைகளாலும் தலையை அணைத் துத்தடவும்போது ஆனந்தக் கண்ணீர் உதிர்ந்தது.

கடிதத்தைப் படித்த அமிருதவல்லியம்மாளுக்கு உயிரே போய் விட்டதுபோன்ற வேதனையுண்டாகி, “ஐயோ !...இப்படியா நடந் திருக்கிறது ?...என் செல்வமே! சந்திரா!...சந்திரா!”...என்று கர் ஜிப்பதுபோல் கூச்சலிட்டுச் சந்திராவின்மீது சாய்ந்தாள். அவ்வளவு தான், அவளுக்கு மயக்கம் வந்து பிரக்ஞை இழந்தாள். இதைக் கண்ட சந்திராவின் உள்ளம் துடிதுடித்து நெருப்பில் குதித்தது போலாகியது. “அம்மா! அம்மா!” என்று கதறுகிறாள்... ஆயோ மயமான நிலையில் மூழ்கிய சந்திராவின் உயிர் துடிக்கின்றது.

"அன்புமிக்க பெற்றோர்களின் திருவடிகளுக்கு நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுதவும்.

என்னிடமிருந்து நீங்கள் இத்தகைய கடிதத்தை எதிர் பார்த்தேயிருக்கமாட்டீர்கள். அத்தகைய உங்களை இக் கடிதம் ஒரு தீராத துயரக் கடலில் ஆழ்த்தும் என்பதும் எனக்குத் தெரியும். இருப்பினும் ஒரு உத்தமமான நல்ல காரியத்தை உத்தேசித்து இந்த சிறு வருத்தத்தை நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

தற்சமயம் நமது நாட்டிலிருந்து ஆயிரக் கணக்கான மக்கள் தேசத்தின் பாதுகாப்புக்காகத் தம்தம் அருமையான மக்கள் மனைவியையும், அன்புக் களஞ்சியமான பெற்றோர் களையும் விட்டு விட்டு, நாட்டின் நலனுக்காக ராணுவத்தில் சேர்ந்திருப்பது நீங்கள் அறியாததல்ல. அத்தகைய சிறந்த த்யாகத்தைச் செய்ய பல்லாயிரக்கணக்கானவர்கள் முன் வந்திருக்கும்போது நான், ராணுவத்தில் சேராத ஒரு உத்யோக ஸ்தனாக, சண்டை நடக்கும் இடத்திற்குச் சமீபத்தில் சென்றிருக் கிறேன். நான் எங்கேயோ ஓடிவிட்டதாகக்கூட நீங்கள் நினைக்கலாம். மனித ஜென்மம் எடுத்த எவருக்கும் ஒரு சேவை செய்தோ, சிறந்த தான தருமம் முதலியன செய்தோ, சரீர உபகாரம் செய்தோ இன்புறுவதுதான் பிறவியின் ஸார்த்தக மாகும். அம்முறைகளில் எதுவுமில்லையெனினும் இந்த உத் யோகத்தைக்கூட நீங்கள் ஒப்பமாட்டீர்கள் என்பது எனக் குத் தெரியுமாதலால் நான் சொல்லாது போய்ச்சேர்ந்து விட்டேன். நான் இப்போது எங்கிருக்கிறேன், என்ன செய்கிறேன் என்று சொல்லமுடியாது. நீங்கள் அடிக்கடி என் க்ஷேமத்தை அறியும்படிக்குச் செய்கிறேன், உங்கள் நாட்டுப்பெண்ணை அவள் தாய்வீட்டிற்கனுப்பிவிடுங்கள். நீங்கள் உங்கள் சிறிய மகனிடம் இருங்கள். உங்களிடம் சொல்லாது போனதற்காக மன்னிக்கவும். பகவத் க்ருபையில் ஒருவிதமான விபத்தும் நேராது என்று நம்புகிறேன். தைரிய மாயிருங்கள்.

உங்கள் அருமை,
சேகர்."

இக்கடிதத்தைப் படித்த பெற்றோருக்கு எப்படித்தானிருக் கும்? மகன் சண்டையில் சேர்ந்து துப்பாக்கியோ, கத்தியோ பீரங்கியோ, குண்டுகளோ, தாங்கி யுத்தம் செய்வதாகவே நினைத்து இடிவிழுந்து உண்மையில் மூர்ச்சையாகிவிட்டார்கள்.

தன்னுடைய சந்தேகப் பிசாசும் பொறுமைத் தீயுந்தான் தன் வாழ்க்கைப் பாதையில் பெருங்கல்லைப் புரட்டிவிட்டது என்பதை

இந்திரா நினைக்கவே இல்லை. தன் கடிதம் கணவன் கையில் அகப்பட்ட விஷயமே தெரியாது. அது எப்படியோ தொலைந்துபோய் வருஷக் கணக்காகிவிட்டதால் அதை மறந்துகூடப்போனாள். இன்று தன் கணவன் சண்டையில் சேர்ந்துவிட்டான் என்பதைக் கேட்டதும், பூர்ண கர்ப்பிணியாகிய இந்திராவின் இதயம் திடுக்குற்றது. தன்தலைமீது ஏதோ பெருத்த இடிவிழுந்ததாகவே அதிர்ச்சி உண்டாகித் துடித்தாள். "ஐயோ! சண்டைக்குச் சென்றுவிட்டாரா! சண்டைக்கு சென்றால் பேராபத்தல்லவா நேரும்...என்னசெய்வது?" என்று தத்தளித்துப் புழுகாய்த் துடித்தாள். அதே அதிர்ச்சியில் அவளுக்கு மனவேதனை தாங்காது ஏற்கெனவே துர்ப்பிணி, மேலும் கர்ப்பிணி' என்கிறபடி வெகு பலஹீனமுண்டாயிற்று.

தங்கள் மகனுக்கும் மருமகளுக்கும் சில காலமாக வாழ்க்கையில் கசப்பு உண்டாகியிருப்பதை பெரியவர்கள் அறியாததால் "இப்படிப்பட்ட மனைவியை இச் சமயத்தில் விட்டுவிட்டுப் போக எப்படித்தான் மனது துணிந்ததோ தெரியவில்லையே. சண்டைக்குப் போவதென்றால் இதைவிட அபாயம் வேறு என்ன இருக்கிறது? இந்த மன அதிர்ச்சியில் மருமகளின் நிலைமை எப்படியாகுமோ! கர்ப்பத்திலுள்ள குழந்தைக்கு ஒரு விபத்துமில்லாதிருக்கவேண்டுமே!" என்று எண்ணாததும் எண்ணித் தவித்து அலறுகிறார்கள். இனி எது செய்து என்ன லாபம்?

உடனே இந்திராவை அழைத்துப் போகும்படி நரஸிம்மனுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். ஏற்கெனவே இதயம் அளிந்த புண்ணாகிப் பலவிதமான துன்பத்தில் தாக்குண்டு கிடக்கும் நரஸிம்மனுக்கும் அம்ருதவல்லிக்கும் இக் கடிதத்தைப் பார்த்ததும் அத்தனை கோபமும் தங்கள் மகள்மீதே பாய்ந்தது. கடிதத்தை அலக்ஷியமாக வீசி எறிந்து அம்ருதவல்லி வெறுப்புடன் தன் கணவனை நோக்கினாள்.

நர:—உம்...நாம் ஒன்று நினைத்தால் கடவுள் ஒன்று நினைக்கிறார். என்னைப் பார்த்தால் நான் என்ன செய்வது? சண்டைக்குச் சென்ற மனிதனின் மனோ நிலைமைதான் நமக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறதே. அனுவச்யமாகத் தன் தலைக்குத்தானே கொள்ளியைத் தேடிக்கொண்டதன் பலன் எரிகிறது. இதற்கு என்ன செய்வது?

அமி:—செய்வதென்ன இருக்கிறது? பெத்த வயிறு கேட்குமா! பூர்ண கர்ப்பிணியாயிருக்கும்போது நாம் அவள் உயிருக்கு ஹானி வராதபடி காக்கவேண்டிய கடமையிருப்பதால் இந்த கலவரங்களை நாம் அறிந்ததாகவே சொல்லவேண்டாம். துர்ப்புத்தியுடைய துராத்மாவின் செய்கையின் விபரீதத்தை பிரஸவித்தபிறகாவது அறிந்து தொலையட்டும். உயிருக்குத் துணிந்து இப்படி சண்டைக்கு ஒருவன் போவானா! அவனது பரிசுத்தம் அறியாத நாம் அவனை எவ்வளவு கேவலம் செய்துவிட்டோம்? ஐயோ பாவம்!...சந்திராவின் பொறுமைக்கும் உயர்ந்த குணத்திற்கும் ஈடு எதிர் உண்டா? எத்தனைதான் நான் கெஞ்சிக் கேட்டும் ஒரு வார்த்தைகூடச் சொல்லாது மூடி

வைத்த என் கண்மணியின் ஆழ்ந்த அன்பை என்னென்பது? வயிற்றில் பிறந்தால் என்ன, உடன்பிறந்தால்தான் என்ன! அன்பு, ஒழுக்கம், சகிப்புத்தன்மை, உத்தமகுணம், பரோபகார சிந்தை முதலிய நற்குணங்களில் ஒன்றுமில்லாத இந்திராவின் கதி எப்படியாகுமோ என்ன நேருமோ! என்று மிக்க கவலையாகவே இருக்கிறது. உம்...எல்லாம் நாம் செய்த வினை...

நர:—ஆமாம். விதி, வினை, கர்மம்...பாவம்...இவைகளின் பேரால்தான் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். லக்ஷலக்ஷமாக சொத்தைக்கொண்டு கொட்டி நம்மையும் கௌரவித்த, உத்தமி என்றால் மிகையாகாது. அத்தகைய சந்திராவிடம்கூட இப்பேர்ப்பட்ட துர்ப்புத்தி உண்டாகலாமா! இது தெய்வத்துக்குத்தான் அடுக்குமா...சந்திராவின் தூய உள்ளத்தின் பரிசுத்தத்தை இத்தனை வருஷம் பழகியும் அறியவில்லை யென்றால் இதை நான் விதி என்று ஒப்புக்கொள்ளமாட்டேன்; வேண்டுமென்று செய்யும் சதி என்றுதான் கூறுவேன்...இந்த கடிதத்திற்கு என்ன பதில் எழுதுவது? என்று சற்று கடுமையாகவே கேட்டார்.

அம்:—என்னத்தை எழுதுவது? நேரே போய் அழைத்துக் கொண்டு வருவது. மிகவும் பலஹீனமாக இருக்கிறாள். அடிக்கடி வயிற்றை வலிக்கிறதென்று சொல்கிறாளாம். எது எப்படியிருந்தாலும் அவன் சண்டைக்குப்போன அதிர்ச்சியே என்னவாகுமோ என்று பயப்படுகிறேன். இதுவும்சேர்ந்தால் உயிருக்கே ஆபத்தாகி விடுமே.சுவரை வைத்துக்கொண்டுதானே சித்திரம் எழுதவேண்டும்? அவளும் அவளுடையசிசுவும் உயிருடன் நன்றாக இருந்தால் கோண புத்தியைத் திருத்தி நல்வழிபடச் செய்யலாம். முதலுக்கே மோசமாகிவிட்டால் என்ன செய்வது? பெத்த மனம் பித்தல்லவா! நாளைக்கே அழைத்து வந்துவிடுவோம். எப்படியும் உங்களுக்கு மாற்றலாகிவிட்டது. நீங்கள் உங்கள் துணைக்கு சந்திராவை அழைத்துப் போங்கள். நான் அவளைத் தனியாக வைத்துக்கொண்டிருக்கிறேன். இதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?-என்றாள்.

அம்ருதவல்லியம்மாளுக்கு உள்ளூற இந்திராவின்மீதுதான் கடுங்கோபம் உண்டாகியது. அவள் செய்த வஞ்சத்திற்கு இந்திராவையும் சந்திராவையும் சேர்த்துவைப்பதே கூடாது. அப்படி ஒன்றாக இருந்தால் ஏதாவது மனத்தாங்கல் இருந்துகொண்டே இருக்கும்; ஆதலால் பிரிப்பதுதான் சிறந்த வழி என்று தீர்மானித்தாள்.

அதேபோல் மறுதினமே கணவனுக்கு வேண்டிய சாமான்களைத் தயார் செய்து, சந்திராவையும் நாகுவையும் கூட்டி நரஸிம்மன் மாற்றலில் செல்லும் ஊருக்கு அனுப்பிவிட்டுத்தானே போய் இந்திராவை அழைத்துவந்து வேறு ஊரில் வைத்துக்கொண்டாள். எதைச்செய்தும் மனத்திற்குமட்டும், சாந்தி ஏது?

சந்திரா தாங்கமுடியாத மனக் கவலையால் நோய்வாய்ப்பட்டவள் போலானாள். தன் அன்பனுக்கு எழுதிய கடிதத்தைத் தபாலில் போடக்கூட அவகாசமில்லாது கூடவே தன் தாயார் தன்னை அணைத்துக்கொண்டிருந்ததால் தனக்கு வந்த கடிதம், தான் எழுதிய கடிதம் இரண்டையும் உடனே சுக்கல் சுக்கலாகக் கிழித்து விட்டாள். கடிதம் எப்படிச் சுக்கலாகியதோ அதேபோல் அவளது இதயமும் சுக்கலாகியது.

"என்னால் செய்யக்கூடிய அல்ப காரியத்தைக்கூட செய்ய முடியாதிருக்கிறேனே!" என்று புலம்புவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்? தன் கையிலிருந்து கடிதம் இந்திராவின் கைக்கு எப்படி போயிற்று?...இவர் கையில் எப்படி கிடைத்தது. எத்தனை விபரீதத்தை அக் கடிதம் உண்டாக்கிவிட்டது என்பவைகளை நினைக்க சந்திராவின் வேதனையும் வியப்பும் அதிகரித்தன.

அடுத்த இரண்டு தினங்களுக்குள்ளாகவே சேகர் சண்டைக்குப் போய்விட்டான் என்கிற விஷயத்தைக் கேட்டு சந்திராவின் உள்ளம் உருகியது. அவள் அந்தரங்கத்தில் செய்யும் கணக்கற்ற வேதனைகளையும் கடலின் அலைகளைப்போல் கொந்தளிக்கும் துக்கத்தையும் அவளால் எப்படித்தான் தாங்கமுடியும்? தன்னைப் பற்றித் தன் அன்பன் என்ன நினைக்கிறானோ! என்று எண்ணும்போது அவள் தேகமே பற்றி எரிவதுபோன்ற வேதனை உண்டாகியது.

எது எப்படி இருப்பினும் தான் இனி கடிதம் எழுதுவது கூடாது. தன் தமக்கையின் கடிதம் செய்துள்ள வேலை போதும். அதுவே ஒரு பாடமாகிவிட்டது. தான் கடிதம் எழுதினால் தன் ஆத்மநாதனிடமே சேருமோ, அன்றி நொண்டி, ஊமை அல்லது அவனது பிதா, முதலியவர்களிடம் சேருமோ! யாரிடம் சேர்ந்து என்ன விபத்தை விளைவித்துவிடுமோ! படுகிற துன்பம் போதும் இனியும்புதிய துன்பத்தை விலைக்கு வாங்கி அந்த மகானுபாவனுக்கும் துன்பத்தைவிளைவித்துத் தானும் அவஸ்தைப்படவேண்டாம் என்று தனக்குள் நினைத்ததால்தான் பதில் எழுதாதிருந்துவிட்டாள்.

ஒரு விநாடிக்குள் ஓராயிரம் மாறுதல்களைக் காட்டும் பகவான் தன்னுடைய மனத்தையறிந்து தன் தகப்பனாருடன் தன்னை ஊருக்கு அனுப்பியது சிறிது ஆறுதலாயும் சாந்தியாயும் தோன்றியது; எனினும் தன் தமக்கையின் கணவன் சண்டையில் சேர்ந்து தமக்கையின் மனத்தை வருத்துவது மட்டும் பரம சங்கடமாகவே இருந்தது. எது இருந்து என்ன பலன்? தான் ஒரு அபலை...ஸ்வதந்திரமற்றவள் என்கிறதை எண்ணி வாளாவிருந்தாள். ஊருக்குப் புறப்படும் சமயம் வந்தது.

தன் தாயாரின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "அம்மா! என்னருமை அம்மா! என் பொருட்டாக நீங்கள் மிகவும்

சாந்தத்தைக் காட்டி அக்காவை க்ஷமிக்கவேண்டும். எத்தனையோ ப்ரயாசைப்பட்டு நான் என்னிதயக் கிணற்றில் புதைத்துவைத்திருந்த ரகஸியத்தை சற்றும் முன்யோசனை இல்லாது அத்திம்பேர் வெளியில் உடைத்துவிட்டதும், என் பாவம் என்றுதான் நினைக்கிறேன். அக்காவை நீங்கள் கோபிக்கவோ, வெறுக்கவோ ஜாடைமாடையாகக்கூட அலக்ஷியம் செய்யவோகூடாது. இதுகாறும் எப்படியிருந்தீர்களோ அதேபோல் இனியும் இருக்க வேண்டும். அப்படியே இருப்பதாக எனக்குச் சத்தியம் செய்து கொடுங்கள். இல்லையேல் என்னிதயம் இதே நோயால் உளுத்துவிடும்...அம்மா!...உளுத்த இதயம் என்கிற அருமையான நாவலைப் படித்து நீங்கள் எப்படிக் கண்ணீர் விட்டீர்கள்? அப்படித்தான் என்னிதயமும் ஆய்விடும். அக்காவிடம் எனக்கு ஒரு அணுவளவும் மனஸ்தாபமில்லை. விரோதமே இல்லை. என்னருமைச் சகோதரி என்னுடைய சேவையை ஏற்றுக்கொள்வதாயின் நான் எனது சரீரத்தைச் செருப்பாயுழைத்து அவளுடைய பணியாளாக இருப்பேன். பிறக்கப்போகும் கண்மணியைக் களிப்புடன் நானே வளர்ப்பேன். அக்காவுக்கும் உங்களுக்கும் ச்ரமமின்றி உழைத்து இன்புறுவேன். ஆனால்,...அக்கா என்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமே'' என்று கண்ணீர்விட்டுக் கலங்குவதைக் கண்ட அமிருதவல்லியம்மாளின் உள்ளம் கரைந்தது.

சந்திராவை மார்புறத் தழுவி முத்தமிட்டுப் பரவசமடைந்து ''கண்ணு!...இந்த அக்ரம உலகத்தில் உன்போன்றவர்களுக்காகத்தான் மழைபெய்கிறது. சிறிது தர்மமாவது தலைகாக்கின்றது. நீ வயதில் சிறியவளாயினும் அறிவில் உனக்கு நிகர் யாருமே இல்லை. உன் பொறுமை உன்னைக்காக்கவேண்டும்.

சந்திரா! உண்மையில் உனக்காக நான் வெகு அன்புடன் நடித்துக் கோபத்தை யடக்கி வேஷம்போடவேண்டுமே யன்றி என்னிதய சாக்ஷியாக நான், அவளைப் பெத்த தாயாக இருந்தும், அவளை வெறுக்கிறேன். இளந்தளிர்போன்ற உன்னைப் பாழ்படுத்தித் தானும் தீராத்துயரத்தில் ஆழ்ந்துவிட்டாள். சேகரை நான் வெகு தப்பிதமாக எண்ணி அலக்ஷியம் செய்ததின் மூடத்தனத்தை இப்போது எண்ணி விசனிப்பதில் பயன் என்ன? அவன் இந்திராவிடம் எப்படித் தன் உயிரையேவைத்து நேசித்தான் பாவம். அந்த அன்பின் இனிப்பையறியாது அவன்மீது சந்தேகமும் த்வேஷமும் கொண்டு அபாண்டப் பழியையும் சுமத்தினல் அவன் உள்ளம் தாங்குமா! சண்டைக்குச் சென்றவனின் முடிவு எப்படியோ, ஏதோ?...என்று நினைக்கும்போது இந்த இந்திராவை எவ்வளவுதான் என் இதயம் வெறுக்கிறது தெரியுமா?''

என்று பேசிக்கொண்டிருக்கையில் தனக்கு இரண்டு கவர்கள் வந்தது கண்டு சந்திரா திடுக்கிட்டாள். ஸ்ரீதரன் கடிதமாக விருக்குமோ என்று ஒருவினடி உள்ளம் துடித்தது. கவரின்

கையெழுத்தைப் படிப்பதற்குள் அமிருதவல்லி கடிதங்களைத் தான் எடுத்து உடைத்தாள். ஒன்று ஸாரநாதன் சந்திராவுக்கு எழுதிய காதல் கடிதம்; மற்றொன்று இந்திராவின் கையெழுத்தாயிருப்பதைக் கண்டு அமிருதவல்லிக்கு வியப்புண்டாகியதால் கடிதத்தைத் தானே முதலில் படிக்கவாரம்பித்தாள்.

“எனக்கு எமன் வேறு ஒருவன் இருப்பான் என்று எண்ணி இருந்தேன். ஆனல், எனக்கு எமன் வேறு யாருமில்லை. மகாபாவி நீதான் எமன் என்பதையறிய என் வயிறு கொதிக்கிறது. உனக்கு என் பெற்றோர்கள் செய்துவரும் உதவிக்கு நீ அவர்களுடைய குடியைக் கெடுக்கும் வேர்ப்புழுவாக அமைந்த சதியை தெய்வம் சகிக்குமா? உன்னைப் பிரித்துவைத்த கொடுமைக்குப் பழி வாங்குவதற்காக ஏதோ சூழ்ச்சி செய்து என் கணவனை எமபட்டணத்திற்கே அனுப்பிவிட்டதுபோல் சண்டைக்கு அனுப்பிவிட்ட நீ வாழுவாயா! உலகத்தில் யார் யாருக்கோ சாவு வருகிறது. குடியைக் கெடுக்கும் கோடாரிக்காம்பாகிய உனக்கு வரக்கூடாதா? என் மனங் குளிராதா?...இந்த வதை உன்னை ஏழேழு தலைமுறைக்கும்விடாது, ஹதம் செய்துவிடும் என்பதை மறக்காதே. என் கணவனையும் என்னையும் பிரித்து ஆனந்தப்படும் உனக்குச் சரியான தண்டனை பகவான் விதித்து நீ உன் கணவனை இழந்து, ஆயுள்காலம் பூராவும் விதவையாக அவதிப்பட்டுச் சாகவேண்டும்”...

என்று எழுதியிருந்ததைப் படித்ததும் அமிருதவல்லியம்மாளின் ரத்தம் கொதித்தது. அக் கடிதத்தைச் சந்திராவிடம் கொடுக்காமல் அப்படியே சுக்கலாகக் கிழித்தெறிந்துவிட்டு அதற்குமேல் அவளால் அங்கு உட்காரமுடியாது எழுந்துபோனாள். சந்திரா கடிதத்தைப் பார்க்காவிட்டாலும் தன்மீது பகையாய் ஏதோ எழுதியிருக்கிறாள் என்று உடனே உணர்ந்தாள். அப்படி அறிந்தும் அவள் உள்ளத்தில் பகை உதயமாகாது இந்திராவின் பேதைமையை எண்ணி அளவிலாத அன்பு நிறைந்து, வாத்ஸல்யமும்தான் சுரந்தது.

47

கற்பனைக்கோட்டையூரில் தனி பங்களாவில் இந்திராவை அழைத்து வந்து குடியேற்றின அமிருதவல்லி அன்பையும் ஆசையையும் காட்டிச் செய்வதெல்லாம் நடிப்பாகவும் மன விரோதமாகவும் தோன்றியதே யன்றி அவளுடைய பழய இதயத்தின் சாயல் எப்படியோ மறைந்தது. இந்திராவின் உடம்பு மிகவும் பலஹீனப்பட்டிருப்பதோடு இரட்டைக் குழந்தையாக இருக்கும் என்று லேடி டாக்டர் சொல்லிவிட்டதாலும், தன் மனத்தில் செய்யும் பலவிதமான அனுவசிய எண்ணங்களின் தாக்குதலாலும் அவளது இதயத்தில் நோயும் கோளாறும் உண்டாகி அடிக்கடி

மயக்கம் வரவும் இதயத்தில் திடீர் திடீர் என்று நோய் உண்டாகித் துடிக்கவும் ஆரம்பித்தாள்.

எத்தனைதான் கெட்டவளாகவிருப்பினும் நோயுடன் அவஸ்தைப்படுவதைக்கண்டு பெத்த தாயின் உள்ளம் சகிக்குமா! இரட்டைக்குழந்தை என்று வேறு சொல்லிவிட்டதால் "எப்படித்தான் தாயும், சேயும் க்ஷேமமாயிருக்கப்போகிறார்களோ!" என்கிற கவலையும், புத்திர சோகம் வாராதிருக்கவேண்டுமே என்கிற மகத்தான திகிலும் அமிருதவல்லியம்மாளுக்கு உண்டாகியதால் இவைகளை விவரமாகத் தன் கணவனுக்குக் கடிதமெழுதி, "எப்படியாவது இரண்டுமாதகாலம் லீவு வாங்கிக்கொண்டு வரவேண்டும். என்னால் தனிமையிலிருக்கமுடியவில்லை. பயமாக இருக்கிறது" என்று எழுதியிருந்தாள்.

183075

இக் கடிதத்தைப் படித்த சந்திராவுக்கு விசனம் தாங்கவில்லை. "அப்பா! உடனே லீவுக்கு ஏற்பாடு செய்யுங்கள். முதலில் அக்காவுக்கு உயர்ந்த டாக்டரை வரவழைத்துப் பார்த்து குணமாக்க வேண்டும். அவர்கள் என்னை என்ன நினைத்தாலும் நினைக்கட்டும். நான் தற்சமயம் அங்கிருந்து அம்மாவுக்கும் அக்காவுக்கும் உதவி செய்யாவிட்டால் என்னிதயமும் வெடித்துவிடும். அப்பா! குற்றங்களையும் கோபங்களையும் பாராட்டும் சமயம் இதுவல்ல. நான் அக்காவின் கண்ணில் படாது மறைந்து, சகல வேலைகளையும் கவனித்துக் கொள்கிறேன். இன்னும் நீங்கள் மனதுவைத்தால் நான் முற்றிலும் மாறுவேஷத்தை யடைந்து நர்ஸாகவே இருந்து எல்லா வேலைகளையும் செய்கிறேன்... அப்பா! இச்சமயம் வஞ்சத்தைப் பாராட்டவேண்டாம்" என்று கெஞ்சி அவரது காலைப்பிடித்துக்கொண்டாள்.

பரம விரோதியையும் களங்கமற்ற அன்புடன் நோக்கும் சந்திராவின் குணத்தைக் கண்டு நரஸிம்மனே வியந்தார். சந்திராவும் தானும் அருகிலிருந்தால்தான் அம்ருதவல்லிக்கும் சற்று ஆறுதலாகுமெனத் தோன்றியதால் சந்திராவின் யோசனையை ஆமோதித்து அவள் விருப்பப்படி செய்வதற்குச் சம்மதித்தார்.

லீவுக்கு எழுதிப்போட்டுவிட்டு சந்திராவுக்கு முற்றிலும் பொருத்தமான ஒரு ஆங்கிலோ-இந்திய நர்ஸ்போல் உடைகளைத் தைத்துக்கொண்டுவந்து அவைகளை அவளுக்கு நன்ருக அணிவித்துப் பார்த்துத்தானே ப்ரமித்துத் திகைத்தார். சந்திராவுக்கு எந்தவேஷந்தான் பொருந்தாது? நகைகள் பூராவும் கழட்டிவிட்டாள். குளிர்ச்சிக் கண்ணுடியொன்றை டாக்டரிமே வாங்கிக் கண்ணுக்குப் போட்டுக்கொண்டபிறகு சந்திராவை அடையாளமே கண்டுபிடிக்க முடியாதுபோயிற்று.

சந்.—அப்பா! புதிதாக ஒரு நர்ஸை அழைத்துக்கொண்டு வந்ததாக அம்மாவிடம் கூறி அவளைக்கூட முதலில் ஏமாற்றி விடலாம். அக்காவிடம் சொல்லவேண்டாம்—என்று முன்கூட்டி முஸ்தீப்பு செய்துகொண்டு இருவரும் அன்றே கிளம்பி

மறுதினம் அதிகாலையில் கற்பனைக்கோட்டையூர் வந்து சேர்ந்தார்கள். நரஸிம்மன் வெகு சாமர்த்தியமாக ஆங்கிலத்திலேயே பேசி தன் மனைவிமுன் நர்ஸை நிறுத்தி, "அமிருதா! இந்த நர்ஸ் மிகவும் கெட்டிக்காரி என்று நான் போயிருக்கும் ஊரில் உள்ள டாக்டர் கூறி, இவளை மாதசம்பளத்திற்கு அமர்த்தி யனுப்பியிருக்கிறார். வெகு கைராசிக்காரியாம். ஆங்கிலந்தான் தெரியும். தமிழ் சிறிது புரியுமாம். இவளை இந்திராவுக்குத் துணையாயும் உனக்கு ஒத்தாசையாயும் அழைத்துவந்தேன்" என்றார்.

உண்மையில் அமிருதவல்லி அசல் சட்டைக்கார நர்ஸ் என்று நம்பி ஆங்கிலத்திலேயே பேசி உள்ளே அழைத்துச் சென்று "இவள் தான் என் மகள்" என்று உடம்புக் கோளாறுகளைக் கூறினாள்.

இந்திராவைப் பார்த்து சந்திராவுக்கு எத்தனையோ யுகங்களாகிவிட்டதால் அவள் இதயத்திலிருந்து அன்பு பீறிக்கொண்டு வருகிறது. தடுக்கமுடியாத உணர்ச்சி பொங்கி எழுகிறது. இந்திராவின் பரிதாபத்தைக் கண்டு ஒருபுறம் இதயம் துடிக்கிறது. ஒரு பாபமும் இல்லாது தனக்குத்தானே இத்தகைய நிலைமையைத் தேடிக்கொண்டாளே என்கிற விசனம் ஒருபுறம் அழுத்துகிறது.

தன்னுள் பொங்கி எழும் பலவிதமான உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு, இந்திராவின் பக்கத்தில் உட்கார்ந்து அவளைத் தடவிக் கொடுத்து "பயப்படாதே. உனக்கு ஒருவித அபாயமும் இல்லை. நன்றாகக் குணமாகிவிடும். கவலை இல்லாது ஆனந்தமாக இரு. உனக்கு நல்ல குழந்தைகள் இரண்டும் ஜோடியாகப் பிறக்கும் அவர்களைப் பார்க்கும்போதே உன் சந்தோஷம் பொங்கி நோயை ஓட்டிவிடும்" என்று நூற்றுக் கிழவியைப்போல் ஆங்கிலத்தில் கூறித் தடவிக் கொடுத்தாள். முதுகில் தட்டிக்கொடுத்து முகத்தையெல்லாம் தடவி கைகளைப் பிடித்துக்கொண்டு தன்னுடைய இதயத்தில் புதைந்து கிடக்கும் அன்பை, ஆவலைத் தீர்த்துக்கொண்டாள்.

இந்திராவுக்கு இந்த நர்ஸைப் பார்த்ததும், அவளுடைய அன்பைக் கண்டதும் அவளையறியாது ஒரு சந்தோஷமும் நர்ஸினிடம் நம்பிக்கையும் உண்டாயின. சந்திரா தன் பெயரை 'மேரி' என்று வெகு சுருக்கமாக வைத்துக்கொண்டதால் அப்படியே அவளைக் கூப்பிட வாரம்பித்தார்கள்.

நர்ஸும் தன் கணவரும் வந்தபிறகு ஒரு சிறிதுபாரம் குறைந்ததாக அமிருதவல்லியம்மாளுக்குச் சிறிது சாந்தி உண்டாகியது. "சந்திராவுக்கு யாரைத் துணை வைத்தீர்கள்? குழந்தை கவலைப்பட்டுஏங்கிப் போகாதிருப்பாளா!" என்று அமிருதவல்லி தன் கணவனைத் துணப்பிவிட்டாள். 'அதற்கு வழி செய்யாமலா வருவேன்? அவளுக்கு நாகம்மா ஒருத்தியே போதாதா! இன்னும் வேறு யார்வேண்டும்? சரியான துணையில்தான் வைத்திருக்கிறேன்' என்று சமாதானம் செய்தாரேயன்றி உண்மையைக் கூறவில்லை.

நர்ஸுக்குத் தனியறையும் தனிவசதிகளும் செய்து கொடுத்தார்கள். சட்டைக்காரியானதால் அன்னிய பதார்த்தங்கள் தின்பாள் என்கிற யோசனையினால் அமிருதவல்லி அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவைத்திருப்பதைக் கண்டு நரஸிம்மனுக்கும் சந்திராவுக்கும் சிரிப்பு வந்துவிட்டது "அவள் மரக்கரியைத் தவிர வேறு இதர வகைகள் தின்பதில்லையாம். ஆகையால் வீட்டுச் சமையலே போதும்." என்று நரஸிம்மனே ஏற்பாடு செய்துவிட்டார்,

இராப்பகலாகக் கண்விழித்து ஜலமலம் முதல் ஏந்திக்கொட்டிச் சகல வேலைகளையும் வெகு பொறுமையாயும் அன்பாயும் செய்வதைக் கண்டு இந்திராவின் உள்ளம் அவளையறியாது சந்திராவிடம் அபரிமிதமான ப்ரேமையை யடைந்து, அரை நிமிஷங்கூட சந்திரா இல்லாது தன்னால் இருக்கமுடியாதென்கிற நிலைமைக்கு வந்தாள்.

இத்தனை அக்கரையுடன் வேலை செய்யும் மேரியை அளவுக்கு மீறி அமிருதவல்லியம்மாள் நேசிப்பதோடு, "உன்னைப் பார்க்கும் போதெல்லாம் என் சந்திராவின் நினைவே வருகிறது. அவள் நடப்பதுபோலவே, பேசுவதுபோலவே இருக்கிறது உனது ஜாடை" என்று வாய்விட்டும் கூறுவாள். இந்திராவும் ஒரு சமயம் 'ஆமாம்மா! எனக்குகூட அப்படித்தான் தோன்றுகிறது' என்றாள்.

சந்திராவுக்கு இந்த வார்த்தைகளைக் கேட்கத் தனக்குள்ளேயே சிரிப்பு பொங்கிவரும், அதை வெகு ப்ரயாஸைப்பட்டு அடக்கிக்கொள்வாள். இவ்விதமே இந்நாடகம் ஒருவாரம் நடந்தது அப்போதும் அமிருதவல்லிக்குத் தெரியாது. சந்திரா தினம் அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டுத் தனது வேஷத்தைச் சரியானபடி போட்டுக்கொண்டு வந்துவிடுவது வழக்கம்.

அன்று இந்திராவுக்கு உடம்பு சற்று அதிகமாயிருந்ததால் பொழுது விடியும்வரையில் அவளைவிட்டு நகரமுடியாதுபோய் விட்டது. வெகுநேரம் கழித்து சந்திரா தனக்கென விடப்பட்டுள்ள விடுதியில் ஸ்நானம்செய்யப் போனாள்.

திடீரென்று இந்திராவின் மார்பு வலி அதிகமாகி "ஹா! ஹா!" என்று கத்தவாரம்பித்தாள் அமிருதவல்லியம்மாள் பயந்துபோய் நர்ஸைக் கூப்பிட ஓடிவந்தாள். வென்னீர்உள்ளே குளிப்பதாக அறிந்து அந்தப் பக்கம் சென்று "மேரீ! மேரீ!...சீக்கிரம் வா... இந்திரா ஏதோமாதிரி இருக்கிறாள்?" என்று கூறிக்கொண்டே போவதற்கும் தன்போக்காகச் குளித்துவிட்டுச் சந்திரா ஒரு சிறிய உடையுடன் வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது கண்டு இருவருடைய ஆச்சர்யமும் கரைபுரண்டது. "என்ன! என்னருமைச் சந்திராவா!....என் கண்மணியா!...இது என்ன!... என்று அமிருதவல்லி தடுமாறிக் கூறுவதைக் கேட்ட சந்திரா, "அம்மா!"...என்று தாயைக்கண்ட கன்றுபோல் அலறியவாறு அன்புப் பெருக்கை அணைகட்டமாட்டாது சேர்த்துக் கட்டிக் கொண்டு..."ச்ச்சு...கத்தாதேம்மா...அம்மா! என்னுடைய சங்கல்

பத்தில் கல்லைப் போடாதே...என்னுடைய ஆவலைக் கலைக்காதே.... அப்பாவும் நானும் சேர்ந்து நடிக்கும் நாடகம் முடியட்டும்''... என்று மூச்சுவிடாது கூறியதைக் கேட்ட அமிருதவல்லி கட்டுமீறிய ஆவேசத்துடன் ''கண்மணீ!...என் செல்வமணீ! இதென்ன மனிதத் தன்மையா! தேவத் தன்மையா!...பூமாதேவியே இப்படி உன் உருவில் வந்திருக்கிறாளா!'' என்று வியப்புக் கடலாடி பூரித்துப்போய்த் தம்பித்தாள்.

சந்திரா தாயாரைக் கட்டிக்கொண்டு ''அம்மா!...நீ எனக்கும் அக்காவுக்கும் சிறுவயதில்,

> இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
> நன்னயஞ் செய்துவிடல்.

என்ற திருக்குறளை சொல்லிக்கொடுத்த குருவாயிற்றே! நீயேவா அந்த நீதியை மறந்துவிட்டாய்! அதோடு ''பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே'' என்ற வெகு அருமையான கவியரசர் பாரதியார் பாடலை நீ படித்தபோது இதுபோல் கூட யாராவது வேண்டுவார்களா! என்று எத்தனைமுறை சொல்லியிருக்கிறாய்? அவைகளை மறந்துவிட்டாயா! அம்மா! இப்போது இம்மாதிரி பேசிக் கொண்டிருப்பதற்கு நேரமில்லை. நம்மைப்படைத்த ஆண்டவன்மீது ஆணையாக நீ இந்த ரகஸியத்தை வெளியிடாதே. அக்காவின் மனம் குளிர அவளுக்குப் பணிசெய்தால்போதும்.'' என்று கூறிச் சமாதானம் செய்துவிட்டுத் தன் வேஷத்தைப் போட்டுக்கொண்டு கிளம்பினாள். இந்த அதியாச்சர்யத்தை அமிருதவல்லியம்மாளால் பொறுக்கவே முடியாதுபோய் கண்ணீராக வழிந்தது.

48

தன் தகப்பனாரைக் காணாது தேடிக்கொண்டு ஓடிய ஸ்ரீதரனுக்கு ஏதேதோ தோன்றி மனது உடைந்துவிட்டது. வெகுதூரம் தேடிக்கொண்டு போகும்போது எதிரில் அழகான ஒரு காரை சந்திரா ட்ரைவ் செய்துகொண்டு வந்தாள். ஸ்ரீதரன் கார் வருவதால் விலகிக்கொண்டானேயன்றி காரைப் பார்க்கவில்லை.

காரில் உட்கார்ந்திருந்த ஸ்ரீதரனின் தகப்பனார் வீதியில் தன் மகன் போவதைக்கண்டதும், 'ஸ்ரீதரா! ஸ்ரீதரா!... அம்மா!...காரை நிறுத்து...அதோ என் மகன் போகிறான். காரை நிறுத்தம்மா!' என்று கத்தினார்.

சந்திராவும் ஸ்ரீதரனைப் பார்க்கவில்லை. அப்படியே காரை நிறுத்தி பின்னுக்கு ஓட்டி நிற்கவைத்து ''ஸ்ரீதர்!...ஸ்ரீதர்!''என்று குயிலினும் இனிய நாதத்தினால் கூப்பிட்டாள்.

தன்போக்காக ஓடும் ஸ்ரீதரன் இந்த குரலை கேட்டதும் மந்திரத்தில் கட்டுப்பட்டவன்போல் நின்று ''சந்திரா!''... என்று

வாய்விட்டுக்கூறி ப்ரமித்தான். கிழவர் கதவைத் திறந்துகொண்டு தடாரென்று கீழே குதித்து "ஸ்ரீதர்! என்னப்பனே! கண்டேன் கலிதீர்ந்தேன். என் கவலைமுற்றும் ஒழித்தேன்... தண்டுளவ ஹாரனைக் கண்ணாரக் கண்டேன்...புண்டரீகாக்ஷனை இதயம் நிரம்ப இன்பத்துடன் ஸேவித்தேன். இதோ...இதோ...இந்த உத்தம சிகாமணியினால் எனக்குத் தரிசனம் கிடைத்தது." என்று ஆனந்தக் கூத்தாடினார்.

ஸ்ரீதரனின் மனம் பொங்கும் வேகத்தில் உச்சி வெடித்து விடுமோ என்ற அதிர்ச்சி உண்டாகியது...சந்திராவை எதிர் பாராது சந்தித்த இன்பமும், தகப்பனார் கிடைத்த சந்தோஷமும் அவர் நெடு நாட்களாகக் கோரிய இஷ்டம் பூர்த்தியாகி அவர் மனங்களிக்கும் அபாரமான உத்ஸாகமும் ஒன்றுகூடி அவனை ஒரு ஆட்டு ஆட்டியது. தகப்பனாரைக் கட்டிக்கொண்டு, "அப்பா! ஸ்வாமிதரிசனம் செய்தீர்களா! உங்கள் கலி தீர்ந்ததா...உங்கள் மனக்குறை யொழிந்ததா!" என்று கேட்கிறான். கண்கள் சந்திராவின்மீது தாவுகின்றன.

பகிரங்கமாகப் பேசவும் முடியவில்லை. சந்திரா அப்படியே அசையாப் பதுமைபோல் உட்கார்ந்துவிட்டாள். பேசவும் முடிய வில்லை. உணர்ச்சியை அடக்கவும் சாத்தியப்படவில்லை. மனது துடிக்கின்றது. இடமோ நடுவீதி. நேரமோ ஓடுகிறது. கண்ணில் நீர் கொட்டுகிறது. கிழவரைப்பார்த்து, "ஐயா! இனிமேல் இப்படி தனிமையாக வராதீர்கள். நான் ப்ரேக்குபோட்டு நிறுத்தமுடியாது போயிருந்தால் உமது நிலைமை மிகவும் அபாயகரமாக முடிந் திருக்கும். யாருடைய துணையாவது கொண்டு நீர் தினம் அந்தக் கோயிலுக்குப் போய் ஸ்வாமி தரிசனம் செய்யும்; உம்மை யாரும் கட்டுப்படுத்தமாட்டார்கள். நான் போய்வருகிறேன்" என்றுகூறி ஸ்ரீதரனைப் பார்த்தாள்.

இந்த வார்த்தையிலிருந்து ஸ்ரீதரனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. பொதுவாக நன்றி கூறுவதுபோல் "அம்மணீ! என் தந்தையைக் காப்பாற்றியதற்காக நான் என் நன்றி விச்வாசத்தைச் சமர்ப்பிக் கிறேன்" என்று கூறுவதற்குள் தொண்டை கம்மியது.

சந்:—ஐயா! பகவானுக்கே எல்லாம் அர்ப்பணம். நீங்களிரு வரும் இந்த காரில் ஏறுங்கள்; உங்கள்வீட்டில் கொண்டுவிடுகிறேன்.

ஸ்ரீ:—வேண்டாம்; வேண்டாம்...இந்த மகத்தான உபகாரம் செய்ததேபோதும். இன்னும் ச்ரமம் வேண்டாம்...என்றான். தகப் பனார்கூட இருப்பதால் பேசமுடியவில்லை. மனத்தில் குறையும் முகத்தில் சோகமும் ததும்பமெல்ல நாலடிச் சென்றான்; காரும் ஸ்டார்ட் செய்யும் ஓசை கேட்டது.

முன்னால் சென்ற ஸ்ரீதரன் "அப்பா! இதோ வருகிறேன். இப்படியே இருங்கள்" என்று கூறிவிட்டு வெகு வேகமாகக் காரிடம் வந்து "சந்திரா!...ஐயோ! எனக்குப் பேசவே தெரிய

வில்லையே...உன்னை மறுபடியும் பார்க்கமுடியுமா!...என் கடிதம் உனக்குச் சேர்ந்ததா...பகவான் எத்தனைவிதந்தான் இப்படி சோதிப்பார்?...சந்திரா!...சந்திக்கும் அரை வினாடியும் கண்ணீர் தானா....ஒரு வார்த்தை இல்லையா?'...என்று நெஞ்சையடைக்கும் துக்கத்துடன் கேட்டான்.

கண்ணீர் மாலை மாலையாகக் கொட்டுகிறது. ஸ்டீரிங்கியைக் கையில் பிடித்தபடியே...“நான் வாங்கிக்கொண்டு வந்த வரம் இது தான். கடிதம் சேர்ந்தும் என்னால் உதவிபுரியாது போயிற்றே என்று இரவு பகல் துடித்தேன். என்னுடைய பிறவியில் நிமிடத்திற்கொரு வினோதத்தைப் பகவான் காட்டிச் சோதிக்கிறார்...இருப்பினும் தங்கள் பிதாவை நானே கோயிலுக்கு அழைத்துச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்வித்து மகிழும் பாக்யத்தைக் கொடுத்தாரே கடவுள். அதுவேபோதும். என் தகப்பனார் கற்பனைக்கோட்டையூரில் இருக் கிறார். என் சகோதரிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கிறது. அதற்கு உங்களுடைய பெயரைச் சூட்டி என்னாவல்தீர வாயார அழைத்து இன்புறுகிறேன். ஆனால் அவள் மிக்க காயலாக இருக் கிறாள். நான் ஒரு அவசர காரியமாக இங்குவந்தேன். வந்த இடத்தில் இந்த ஆனந்தமாவது கிடைத்தது. இதுதான் என்பாக்யம்.. ஸ்ரீதர்!... அதோ அவர் காத்திருக்கிறாரே!”...என்றாள்

‘இதோ போகிறேன்...மறுபடியும் பார்க்கவேமாட்டேனே! என்று ஏங்கிய எனக்குப் பார்க்கும் பாக்யம் கிடைத்ததே என்ன திர்ஷ்டம்...மறுபடி எப்போதேனும் பார்க்கமுடியுமா?’ என்றான்... ‘உம்.. பார்ப்பதனால் இன்னும் துன்பமேயன்றி லாபமென்ன...பார்த் துப் பிரிவதில் ஓர் ஆசையா...நடுவீதியில் பேசுவது நியாயமில்லை. நான் வருகிறேன். என்னை மன்னித்து...மறக்காதிருப்பீர்களா... உம்...நான் வருகிறேன்...வீண் சந்தேகத்திற்கு இடம்வேண் டாம்...நான் யார் என்று உங்கள் பிதாவுக்குச் சொல்லவேண் டாம்...உங்கள் அதிர்ஷ்டசாலியான மனைவி சவுக்யமா! அவர் களுக்கு என் வந்தனத்தைத் தெரிவிக்கவும்” என்று கூறி காரை ஸ்டார்ட் செய்தாள்.

ஸ்ரீதரனும் பேசவே தெரியாமல் விழித்தவாறே கார் செல் வதையே பார்த்துக்கொண்டிருந்தான். பிறகுதான் தந்தையின் நினைவு வந்ததும் ஒரே ஓட்டமாகத் தகப்பனாரிடம் வந்து அவரை அழைத்துக்கொண்டு நடக்க வாரம்பித்தான். சரீரம் தகப்பனாருடன் நடக்கின்றது. மனமோ சந்திராவுடன் பறந்து சென்றது. காரும் மாயமாக மறைந்தது.

49

இன்னும் இந்திராவுக்கு, சந்திரா மிஸ்மேரியாகத்தானிருக்கிறாள். ஆண் குழந்தைக்கு ஸ்ரீதரன் என்றும் பெண் குழந்தைக்கு அனுசூயாதேவி என்றும் சந்திராவின் விருப்பப்படியே அமிருத

வல்லியம்மாள் பெயரிட்டாள். மாதம் ஒன்ருகியது. சேகரிடமிருந்து கடிதமும் இல்லே. யாதொரு தகவலும் இல்லாததால் இந்திராவின் கவலே அதிகரித்தது. இந்திராவின் பரிதாபத்தைக் கண்டு சகியாது சந்திராவுக்குப் பின்னும் விசனமாகவிருந்தது.

குழந்தைகளின் காரியம் பூராவும் சந்திராவே கவனித்துக் கொண்டு வெகு அன்புடனும் ஆர்வத்துடன் வளர்த்துவந்தாள். இந்திராவுக்கு நாளடைவில் காசநோயும் இதயநோயும் ஒன்ருகூடிப் படுக்கையாகவே தள்ளிவிட்டது.

அம்ருதவல்லியம்மாளுக்கு சந்திராவின் ரகஸியம் தெரிந்தபிறகு அவளுடைய இதயமே புதிய விந்தை மலராக மலர்ந்தது. சந்திராவின் விருப்பப்படியே ரகஸியமாக இருக்கவேண்டுமென்று எத்தனே ப்ரயாசைப்பட்டும் "என் கண்மணீ! சந்திரா" என்று வாய்விட்டுக் கூறிவிடும்படியான அன்பு அலேமோதுகிறது. சட்டைக்காரி என்று நினேத்திருந்தவரையில் அமிருதவல்லியம்மாள் அவள் எதிரில் சாப்பிடாமலும், இந்திராவுக்குக்கூட ஆகாரத்தைத் தன் கையால் தான் கொடுத்தும் வந்தாள். ரகஸியம் தெரிந்தபிறகு தனக்குக்கூட சந்திராவைக் கொண்டு கொடுக்கும்படிச் செய்ததும் சமயல் உள்ளேயெல்லாம் போகச்செய்ததும் வீட்டு வேலேக்காரர்களுக்கு முதல் ஆச்சரியமாயிருந்தது.

நர்ஸினிடம் அம்ருதவல்லி நடந்துகொள்வதும் அடிக்கடி அவளேக் கட்டிக்கொண்டு முத்தமிடுவதும் தன் இதயத்திலிருந்து பொங்கிவரும் உணர்ச்சியுடன் சந்திராவிடம் பேசுவதும் தனது இரும்புப் பெட்டி சாவி முதல் வைரமாலே வரையிலுள்ள நகைகளே நம்பிக்கையுடன் கொடுப்பதும் காண இந்திராவுக்குக் கூறத் திற மற்ற ஆச்சரியமும், வினேதமும் அபாரமாகப் பொங்கி எழுந்ததெனி னும் நல்ல வேளேயாக அது பொருமையாக மட்டும் மாறவில்லே.

நரஸிம்மன் சந்திராவைத் தட்டிக்கொடுத்தும் தடவிக்கொடுத் தும் பேசுவது மற்றவர்களுக்கு வெகு விசித்திரமாக இருந்தது. இந்திரா ப்ரஸவித்தபிறகு குழந்தைகளுக்கு மட்டும் சந்திரா நர்ஸாகி விட்டாளேயன்றி இந்திராவுக்கு உண்மை நர்ஸ் ஒருத்தியை நியமித் தார்கள். மாதக்குறைவில் பிறந்த குழந்தைகளாதலால் வளர்ப்பதற்கு மிகவும் ப்ரயாசையும் கஷ்டமும் உண்டாகியது. இரட்டைக் குழந் தைகள் பிறந்திருக்கிறதென்று இந்திராவின் மாமியார் மாமனுருக் குக் கடிதம் எழுதினுர்கள்.

அவர்களுக்குத் தன் மகன் சண்டைக்குப்போய்விட்டதற்குக் காரணம் வயிற்றிலுள்ள துரதிருஷ்டப் பிண்டங்களே யாகும் என்ற ஒரு வெறுப்பு உண்டாகியதால் அவர்கள் ஒப்புக்காகவந்து பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள். ஆசையுடன் உலகத்தவர் களேப்போல் சீராட்டவே இல்லே.

சேகருடைய அந்த கடிதத்திற்குப் பிறகு கடிதமே இல்லே. அவனேப் பற்றிய தகவல் எதுவுமே தெரியவில்லே யென்ருல் பெற்

ளோர்களின் மனது கலங்குவதற்குக் கேட்கவேண்டுமா? இந்திராவுக்கும் நாள் ஏற ஏற தன் கணவனைப் பற்றிய கவலை மிகவும் பாதித்து அதுவே மனோவேதனையாக மாறி நோயைக் குணப்படுத்த விடாது பாதித்தது.

இந்:—அம்மா! அப்பாவிடம் சொல்லி யாராவது பெரிய மனிதர்கள் மூலம் அவரைப்பற்றி ஏதாவது விசாரிக்கச் சொல்லக்கூடாதாம்மா! எத்தனை மருந்துகள் சாப்பிட்டாலும் எனக்கு அவரைப் பற்றிய கவலையே அதிகமாயிருப்பதால் உடம்பில் ஒட்டவே மாட்டேன் என்கிறதே, என்ன செய்வேன்?

அம்:—என்ன செய்யலாம்? நானும்தான் இரவு பகல் அதே வேதனையில் தவிக்கிறேன். அப்பாவுக்குமட்டும் கவலையில்லையா! அவருந்தான் ஆகாரங்கூடப் பிடிக்காமல் தவிக்கிறார். அவ்வளவு தூரம் போவானேன். நீ என்னமோ விஷப் புழுவாக உன் சகோதரியை நினைத்திருக்கிறாய். அவள் அங்கு நெருப்பின்மீது புழுகாய்த் துடிக்கிறாளாம். அதுமட்டுமா! இந்த மேரி உனக்காக என்ன அலைகிறாள் தெரியுமா? அவளென்னமோ ஒரு சட்டைக்காரி, உனக்கும் அவளுக்கும் என்ன சம்மந்தம்? அவள்கூட 'உங்கள் இளைய பெண் ஏன்வரவில்லை?' என்று வியப்புடன் கேட்கிறாள். சந்திராவும் குழந்தைகளைப் பார்க்கத் துடியாய்த் துடிக்கிறாள். பரதேசிக்குழந்தை பாவம்!'' என்று பரிதாபத்துடன் கூறினாள்.

இதற்குமட்டும் இந்திரா பதில் பேசாமல் திரும்பிப் படுத்துக் கொண்டாள். இதைக் காண அமிருதவல்லியம்மாளுக்கு எரிச்சல் பத்திக்கொண்டது. சடக்கென்று எழுந்துபோனாள். வியாதி வளருவதற்கும், நாட்கள் உருளுவதற்கும் கேட்கவேண்டுமா!

சேகரிருக்குமிடமே தெரியவில்லை. தினந்தோறும் பத்திரிகையில் வரும் விஷயங்களைப் பார்த்தால் அதி பயங்கரமாக இருக்கிறது. எதிரியின் குண்டு வீச்சால் சேதம் அதிகம்...என்று தினம் வரும் செய்தி யாரைத்தான் கலக்கிவிடாது?

தன் கணவன் சொல்லாமல் போனபிறகு தனக்கு ஒரு கடிதங்கூட எழுதாதது மிகவும் குறையாக இருந்ததோடு, அவன் சென்றபிறகே அவன்மீது அதிகப் பற்றுதலும் அவளாலேயே கண்டுபிடிக்கமுடியாத ஒருவிதமான மனோவேகமும் உண்டாகியது.

தன் கணவனுக்குத்தானே பல கடிதங்கள் எழுதினாள். ஒன்றுக்கும் பதிலே இல்லை. ஆபீஸ் அதிகாரியைக் கண்டு நரஸிம்மன் விசாரித்ததில், வெகு தூரமுள்ள ஊருக்குத் தானே சண்டைக்கு உழைப்பதாகப் பேர் கொடுத்து மாற்றிக்கொண்டு போய்விட்டதாகத் தகவல் கிடைத்தது. மாதத்திற்கு ஒருதரம் தன் பெற்றோர்களுக்குமட்டும் தனது க்ஷேமத்தை இரண்டே வரியில் தெரிவித்தானேயன்றி மற்றபடி தன் மனைவியைப்பற்றியோ, குழந்தைகளைப் பற்றியோ ஒரு தகவலும் எழுதாதிருந்தது அவனுடைய பெற்றோர்களுக்கே வியப்பாயும் விளங்காத பூடக மூடுமந்திரமாயும் இருந்தது.

இந்திரா தனக்கு உடம்பு மிகவும் கேவலமாக இருக்கிறதென்றும் தன்னை இப்படி அலக்ஷியம் செய்யும் வேதனையினாலேயே தன்னுயிர் போய்விடும் என்றும் கண்மணிகள்போல் பிறந்துள்ள குழந்தைகளை இம்மாதிரி பாராதிருப்பது சொல்லமுடியாதவேதனையாயிருக்கிறதென்றும் இதற்குப் பதில் போடாவிட்டால் தான் கட்டாயம் இறந்துவிடுவதாயும் கணவனுக்கு ஒரு கடிதமெழுதினாள்.

அதற்குமட்டும் வெகு நாட்கள்கழித்துப் பின்கண்டபதில் வந்தது. "என்றைக்குமே ஒரு மனிதன் முட்டாளாகவோ ஏமாந்த சோணகிரியாகவோ இருக்கமுடியாது. நீ மகா உத்தமியாக இருப்பதனால்தான் கணவன்மீது படாப்பழியைச் சுமத்தியும், ஒரு பாபமும் அறியாத பச்சிளங்குழந்தையின் தலையில் எரிமலையைப் புரட்டியும் கடிதமென்கிற கொடிய பாணத்தை உபயோகித்ததை நான் என்று பார்த்தேனோ அன்றே, நீ இறந்துவிட்டதாகத்தான் நான் எண்ணிவிட்டேன். இனிமேல் உன் தகப்பனாரோ, நீயோ, அதிகப்பிரஸங்கித்தனமாக என் ஆபீஸ் அதிகாரிகளுக்குக் கடிதமெழுதி எனக்குத்தொந்தரவும் அவமானமும் கொடுக்கவேண்டாம்"

இந்த கண்டிப்பான கடிதத்தைப் பார்த்ததுதான், இந்திராவின் கதிகலங்கியது. "என்னது! என் கடிதத்தைக் காணவில்லை என்று நான் கலங்கினேனே...அது அவர் கையிலா அகப்பட்டுவிட்டது. ஐயையோ! இனி என் வாழ்நாள் முடிந்துவிட்டதா! என் கதி அதோகதியாகிவிட்டதா! எப்படி அந்த கடிதம் அவர் கையில் கிடைத்திருக்கும்? ஐயோ! குடிமுழுகிப்போய்விட்டதே... அவரைப்பற்றியும் சந்திராவைப்பற்றியும் நான் நினைத்ததுமுற்றும் வெறும் பிரமையா!...பிரமையா! உண்மையில் நான் இல்லாத எண்ணத்தையா எண்ணினேன்...சந்திரா அவர் உள்ளத்தை...ஹ... அவர் சந்திராவைப் பார்த்த பார்வை...இல்லையே...என் கணவர் சந்திராவிடம் பழகியமாதிரி...ஐயோ!...ஏதோ செய்கிறதே... மாரை வலிக்கிறதே...என் தலை சுழலுகிறதே" என்று தனக்குள் அபாரமாக எண்ணித் தவித்தவாறு மயக்கத்தில் ஆழ்ந்தாள். அவளுக்கு வந்த கடிதமே பெரிய எமனாகத் தோன்றியது.

இந்திரா மார்வலி என்று துடிப்பதைப் பார்த்த அம்ருதவல்லியம்மாளுக்கு, என்னவிருந்தாலும் பெற்ற வயிறல்லவா? ஒரே கலக்கலாகக் கலக்கி நிலை தடுமாறச்செய்த நிலையில்..."இந்திரா!... என்னம்மா செய்கிறது? இதோபாரு"...என்று பதைப்புடன் கேட்டாள். "ஹா...ஹா! மாரை அடைக்குறதே...மூச்சுவிட முடியவில்லையே, அம்மா! அம்மா! அவருடைய கடிதம் என்னைச் சீக்கிரம் எமனுலகில் சேர்த்துவிடும் போலிருக்கிறதே.. ஹா அம்மா! என் குழந்தைகள் எங்கே...கொண்டுவா"...என்று தத்தளித்தாள்.

இந்திரா மூச்சுவிடத் திணறுவதையும் ஏதோமாதிரி விழிப்பதையுங் கண்ட அம்ருதவல்லியம்மாள் குலை நடுங்கிபோய், ரகஸியம் என்பதையும் மறந்து "ஐயையோ! சந்திரா! சந்திரா! சீக்கிரம்

வாயேன்...இந்திரா என் தலையில் கல்லைப் போட்டுவிடுவாள் போலிருக்கிறதே!'' என்று பெரியதாகக் கத்தினாள்.

"என் செல்லக் கண்ணே வாடா! என் ஸ்ரீதரனே வாடா! அழாது பால்குடித்து விடுவாயாம், நீ நல்ல சமத்தோன்னோ! என் ராஜா என் செல்லக் கிளியோன்னோ!'' என்று அன்புப் பெருக்கால் சந்திரா குழந்தையைக் கொஞ்சி முத்தமிட்டும், தன் வாயாறப் பல தரம் "ஸ்ரீதரா! ஸ்ரீதரா!'' என்று தன்னருமை ஸ்ரீதரனின் பெயரைக் கூப்பிட்டு இன்புற்றும் மகிழ்வதில் அவளுடைய உள்ளம் கரை கண்ட ஆனந்தத்தை அடைந்தது.

மனத்தில் எதைச் சதா நினைக்கிறோமோ அதுவே உருவத்தில் காண்பது ஒரு இயற்கை யல்லவா?...தன் மனத்திலுள்ள ஆவலின் மிகுதியால் குழந்தையை "ஸ்ரீதரன், ஸ்ரீதரன்'' என்று அழைக்க அழைக்க குழந்தையின் முகத்தில் அசல் ஸ்ரீதரனைப்போலவே உரு வெளித்தோற்றம் உண்டாகும். திடீர் திடீர் என்று ஸ்ரீதரனின் குரல் கேட்பதுபோலவே தோன்றி அலறுவாள். பரப்ரம்ம ஸ்வரூபமாகக் கிடக்கும் குழந்தையின் சவுந்தர்யவதனத்தில் எங்குமில்லாத எழிலைக்கண்டு சந்திரா அதில் ஐக்யமானாள். பெண் குழந்தையை விட ஆண் குழந்தையிடமே அவள் மனது லயித்தது.

சந்திரா குழந்தைக்குப் பால்போட்டிக் கொண்டிருக்கையில் அம்ருதவல்லியம்மாளின் தீனமான குரலில் அலற்றுவதைக் கேட்டு நிலை தடுமாறி குழந்தையுடன் "எம்மா!...அம்மா!...இதோ வந்து விட்டேன்'' என்று வழக்கத்திற்கு விரோதமாகத் தமிழிலேயே பதில் கூறிக்கொண்டு பதைக்கப் பதைக்க ஓடிவந்தாள்.

திணறும் நிலைமையிலும் இந்திரா, தன் தாயார் கூப்பிட்டதை நன்கு கவனித்து "இதென்ன தடுமாற்றம்!'' என்று நினைப்பதற்குள், சந்திரா குழந்தையுடன் தமிழில் பதில் சொல்லிக்கொண்டு வந்ததைக் கண்டு இன்னதென்று கூறத்திறமற்ற வியப்புக் கடலில் மூழ்கி கண்களை உருட்டி உருட்டிப் பார்த்து "என்ன சந்திராவா!... சந்திராவா!...மிஸ் மேரியா சந்திரா!...அம்மா!''...என்று ஒரு கர்ஜனை செய்தாள். அவளுடைய கண்கள் அப்படியே சந்திராவின் மீது பாய்ந்து ஆணி அறைந்ததுபோல் நின்றன. சந்திராவும் அமிருதவல்லியம்மாளும் ஒரேயடியாகத் திடுக்கிட்டு ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டார்கள். இருவருடைய வாயும் அடைத்தது; எங்கும் மௌனம் குடிகொண்டது.

183075

கூறவும் வேண்டுமா! மற்ற பத்திரிகைகளுக்கும் இதற்குமுள்ள வித்யாஸத்தை நீங்களே அறிந்திருக்கலாம். மற்ற பத்திரிகைகள் பெரும்பாலும் விளம்பர மழையின் உதவியால் பயிராகின்றன. மோகினியின் அம்சத்தில் உங்கள் ஆதரவு மழையைத் தவிர வேறு உண்டா?

உங்கள் அன்புக்கு அர்ப்பணமாக வைரவிழா நாவலை இனாமாகவே கொடுத்து உங்களை மகிழ்விக்க நான் பலதரம் எண்ணினேன். இந்த வருஷ ஆரம்பத்தில் பேப்பர் இருந்த நிலைமை இன்று இருந்தால்கூட அந்த என்னுடைய ஆசை நிறைவேறியிருக்கும். ஆனால், பேப்பர் பஞ்சத்தின் உக்ரகம் ஜன்னி ஏறுவதுபோல் ஏறியிருக்கும் காலத்திலுங்கூட அன்பர்களுக்குச் சலுகை காட்ட முன்வந்து "குறைந்த விலை ரிஸர்வேஷன் திட்டம்" வெளியிட்டோமல்லவா? நேயர்கள் ஷை திட்டத்தைப் பெரும்பாலும் நவம்பர் மாதத்திலேயே பயன்படுத்திக்கொண்டு ரூ 1/- வீதமே பணமனுப்பி 'ரிஸர்வ்' செய்துகொண்டார்கள். ஏஜண்டுகள் நவம்பரில் ஆர்டர் அனுப்பியதை முற்றும் ஏற்றுக்கொண்டோம். ஆனால் டிஸம்பர். முதல் வாரத்திலேயே மலர் முற்றிலும் 'ரிஸர்வ்' செய்தாகிவிட்டதால், அதன்பின்னர் பணமனுப்பிய சந்தாநேயர்களுக்கு திருப்தியளிப்பதற்காக, டிஸம்பரில் ஏஜண்டுகளின் ஆர்டர்களைக் கட்டுப்படுத்தி குறைக்கும்படி நேரிட்டது.

நேயர்கள் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஆரம்பத்தில் தனி நாவல் சுமார் ரூ. 1/- விலையில் வெளியிடுகிறோமல்லவா? (ஆத்மசக்தி, 1940 ரூ. 1/4; கருணாலயம், 1941 ரூ. 1/-; கலாநிலயம், 1942 ரூ. 1/4) அதேமாதிரி வைரவிழா நாவல் "க்ருபாமந்திர்" 1943 ரூ. 1/- என்று வெளியிடப்பட்டிருக்கிறது. மலர் கிடைக்காத அன்பர்கள் ரூ. 1/- முன்பணமாக அனுப்பினால் "க்ருபாமந்திர்" (10 அழகிய படங்களுடன் கூடியது) ஜனவரி௴ 10-ந் தேதிக்குப்பின் அனுப்பப்படும். தாமதித்தால் அதுவும் செலவழிந்துவிடும்.

சென்ற நவம்பரில் ரூ. 1/- அனுப்பிய அன்பர்களுக்கு நமது மலர் பகுதி முற்றிலும் இனாமாகவல்லவா கிடைத்துள்ளது! இவ்வாறு புது வருடப் பரிசு அளித்தது பற்றி மோகினிக்கு எவ்வளவு எல்லையற்ற ஆனந்தம்! டிஸம்பரில் ரூ. 1/4 அனுப்பியவர்களுக்கு நமது மலர் பகுதி நான்கு அணாவுக்கே கிடைத்துள்ளது. இதுவும் ஒரு பெரிய சலுகையல்லவா?

மலர் முற்றிலும் அச்சாவதற்கு முந்தியே 'ரிஸர்வ்' செய்துவிட்டதைப் பற்றி நமக்கு சந்தோஷமேற்படினும், தாமதித்த பல அன்பர்களுக்கு மலர் பிரதி இல்லையே யென்பதுபற்றி வருத்தமும், அவர்களிடம் அனுதாபமும் ஏற்படுகிறது. மோகினி அன்பர் ஒவ்வொருவருக்கும் மலர் கிடைக்கும் வண்ணம் அடுத்த ஆண்டிலாவது பேப்பர் பஞ்சம் மறைந்து சந்தோஷ நிலைமை ஏற்படும்படி பகவானை பிரார்த்திக்கின்றேன்.

வழக்கம்போல் "மோகினி"யில் ஸ்ரீமான் பி. ஸ்ரீ; ஸ்ரீமதிகள் அம்புஜம்மாள், ஜானம்மாள், குகப்ரியை முதலியோரின் அரிய கட்டுரைகளும், மலருக்கென்று அனுப்பி இடமும், நேரமும் போதாததால் பிரசுரிக்காது நின்றுள்ள கட்டுரைகளும், கதைகளும் வெளிவரும். மோகினிக்கு வாழ்த்துக்கள் அனுப்பியிருக்கும் நேயர்களெல்லோருக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

தங்கள் நன்றியுள்ள,

வை. மு. கோதைநாயகி.

ஜகன்மோகினி
20வது ஆண்டுமலர்

முற்றிலும் செலவாகிவிட்டது

. பிரதிகள் வேண்டுவோர் தம் ஊரிலுள்ள 'மோகினி' ஏஜண்டிடம் விசாரித்து, இருந்தால் வாங்கிக் கொள்ளவும். கிடைத்தால் உங்கள் அதிர்ஷ்டம்.

நம்மிடம் ஒரு பிரதிகூட கிடையாது.

"ரிஸர்வேஷன்" திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளாது, வெளியானபிறகு வாங்கிக்கொள்ளலாமென்று அசிரத்தையாக விருந்தவர்களுக்கு மலர் பிரதிகள் கிடைக்காததுபற்றி எமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

"ஜகன்மோகினி" ஆசிரியை
வை.மு.கோதைநாயகி அம்மாள்

க்ருபாமந்தீர்

வைரவிழா நாவல்

60

(10 அழகிய படங்களுடன் கூடியது)

10—1—1943 தயாராகும்

ரூ. 1-0.

முன் பணமனுப்பி பெற்றுக்கொள்ளவும்

கொஞ்சம் பிரதிகளே கைவசமுள்ளதால் உடனே முந்துங்கள்.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, VENKATAPURAM, SINGAPERUMALKOIL, B. O.